KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823
©_akroo creations | april_2025

Follow us:
# தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 219 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(29.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 30, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823
©_akroo creations | april_2025



உன்னை நீ அறிவாய்!
பக்கம் 04



இந்திய - பாக். உறவில் விரிசல்: அதிகரிக்கும் போர் பதற்றம்
பக்கம் 10



இலங்கை – இந்தியா – தென்னாபிரிக்கா பங்கேற்கும் முத்தரப்பு மகளிர் ஒருநாள் தொடர்
முதல் ஆட்டத்தில் இந்தியாவிடம் படுதோல்வியடைந்த இலங்கை
பக்கம் 12

## அனுமதியின்றி பிரசாரம் செய்வதாக சந்திரிகா முறைப்பாடு



பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் சிலர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக தனது பெயர் மற்றும் புகைப்படம் என்பவற்றை தனது அனுமதியின்றி பயன்படுத்துவதாகவும் அதுதொடர்பில்... » 02 பக்கம்

### தற்கொலை குண்டுத்தாக்குதல் குறித்து

## மைத்திரிபால வாக்குமூலம்



பொரலஸ்கமுவ பிரதேசத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில் சாட்சியாளராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கொழும்பு மேல்நீதிமன்றத்தின் முன்னிலையில் நேற்று (28) வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி பொரலஸ்கமுவ பிரதேசத்தில் அப்போதைய விவசாய அமைச்சராக இருந்த... » 02 பக்கம்

## இளைஞர் கொலையில் மூவருக்கு மரணதண்டனை

### கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு



» 02பக்கம்

# 1/3 பங்கினர் ஏழ்மையில்!

### உலக வங்கி கூறுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

### பொருளாதாரம் சரியாகிவிட்டதாக அரசு பொய் சொல்வதாகவும் சாடல்



''பல பொய்யான வாக்குறுதிகளுக்கு மத்தியில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்கள் இரண்டிலும் வெற்றி பெற்ற ஜே.வி.பி. தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் பொய் மற்றும் ஏமாற்று மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. வளமான நாடு அழகான வாழ்க்கையை அமைத்து தருவோம் என வாக்குறுதி அளித்தனர். வழங்கிய வாக்குறுதிகளை மீறும் நடவடிக்கைகளையே இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. தொடர் ஏமாற்றமே இன்று மக்களிடம் எஞ்சியுள்ளது'' என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

உடுநுவர, கெலிஓயா பிரதேசத்தில் நேற்று (28) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

''தமது முதலாவது வரவு - செலவுத் திட்டத்திலே 35,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் எனக் கூறப்பட்டபோதிலும், அந்த வாக்குறுதியும் மீறப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வந்த கையோடு அரிசி, பால் மா, தேங்காய் போன்றவற்றின்... » 02 பக்கம்

## பிரசன்ன ரணவீரவின் ரிட் மனு நிராகரிப்பு



களனி பிரதேச செயலாளர் பிரிவில் அரச காணியை சட்டவிரோதமாக கையகப்படுத்திய சம்பவம் தொடர்பில் தன்னை கைதுசெய்வதை தடுத்து உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவினால் முன்வைக்கப்பட்ட ரிட் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நிராகரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (28) தீர்மானித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் மொஹமட் லபார் தாஹீர் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரின் தலைமையிலான மேன்முறையீட்டு நீதிமன்ற... » 02 பக்கம்

## கண்டி மாநகரில் 606 தொன் கழிவு

### அகற்றல் செயற்பாடுகளுக்கு நெருக்கடி



» 02பக்கம்

## வாக்காளர் அட்டை விநியோக விசேட தினம் இன்று



ஏழு நாட்கள் எஞ்சியுள்ள நிலையில் வாக்காளர் அட்டை விநியோகத்துக்காக விசேட தினமாக இன்றைய தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இம்முறை 06 இலட்சத்து 48 ஆயிரத்து 495 பேர் தபால்மூலம் வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளதாகவும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு இன்றுடன் (29) நிறைவடைவதுடன், உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்களிப்புக்கு இன்னும் இதுவரை தபால்மூல வாக்களிப்பு மேற்கொள்ளாதவர்கள் இன்று வாக்களிக்க வேண்டியது அவசியமென்றும்... » 02 பக்கம்

## ஆணைக்குழு ஆவணங்களை ஜனாதிபதி பிரத்தியேகமாக பெறுகிறார்

### வாக்குமூலம் வழங்கியதன் பின் ரணில் சுட்டிக்காட்டு



» 02பக்கம்

## திருடர்களை விட்டுவிட்டு ஒன்றுமறியாதோரை பழி கூறாதீர்!

### ஜனாதிபதிக்கு ஹர்ஷ எச்சரிக்கை



"ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, உண்மையான திருடர்களை விட்டுவிட்டு சாதாரண மக்களை திருடர்கள் என்று கூறுவது தவறாகும். தேசிய மக்கள் சக்தி தரப்பினரை தவிர ஏனையவர்கள் சகலரும் திருடர்கள் என்று ஜனாதிபதி கருதுவார்களாக இருந்தால் அதுவும் தவறாகும். இ- விசா விவகாரத்தில் உண்மையான திருடர்களை கண்டுபிடித்தது போல் தெரியவும் இல்லை" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். » 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



சஜித் ஐயா ஜனாதிபதி ஆகியிருந்தா நாடு என்ன ஒரே இரவில பணக்கார நாடாகியிருக்குமோ? சும்மா பேச வேணும் என்றதுக்காக பேசக்கூடாது பாருங்கோ...

## உஷ்



ஐக்கிய மக்கள் சக்தி குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ள கருத்தால் கடும் விசனமடைந்துள்ளாராம் எஸ்.ஜே.பியின் தலைவர் சஜித்.

ரெலிபோன் சின்னம் குறித்த கருத்தினால் பல இடங்களில் கட்சிக்கு பின்னடைவு வரலாமென்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளதால் நேரடியாக ஹக்கீமிடம் தனது விசனத்தை தெரிவித்தாராம் சஜித்.

கடந்த பொதுத் தேர்தலில் ரெலிபோன் சின்னத்தை பாவித்து வென்றுவிட்டு இப்போது அதனை ஹக்கீம் குறைகூறுவது எந்தளவு நியாயம் என்று புலம்புகிறதாம் ஐக்கிய மக்கள் சக்தியின் மேலிடம்.



ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று (28) இடம்பெற்றது.



# மின்னல் தாக்கி ஒருவர் பலி – ஐவர் காயம்



## பதுளையில் சம்பவம்

பதுளை, அட்டம்பிட்டி, கிங்ரோஸ் தோட்டப் பகுதியில் மின்னல் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஐவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (28) மாலை இடம்பெற்றுள்ளது. கிங்ரோஸ் தோட்டப் பகுதியில் வசிக்கும் 48 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு மின்னல் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த ஐவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணும் காயமடைந்தவர்களும் கடும் மழை காரணமாக தோட்டப் பகுதியிலுள்ள கொழுந்து மடுவத்தில் இருந்தபோதே இவ்வாறு மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## திருடர்களை விட்டுவிட்டு...

மொரகஸ்முல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (27) இரவு இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணி நிர்வாகமே இல்லாத, உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி வழங்கும்போதே அதுதொடர்பில் பத்து முறை சிந்தித்திருக்க வேண்டும்.

அங்கிருப்பவர்கள் திருடர்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அவரின் தரப்பினரை தவிர ஏனையவர்கள் சகலரும் திருடர்கள் என்று ஜனாதிபதி கருதுவார்களாக இருந்தால் அது தவறாகும். இலங்கையில் இருப்பவர்களில் அனைவரும் திருடர்கள் இல்லை. முக்கியத்துவம் வாய்ந்த வர்கள். திருடர்கள் இல்லை என்று கூறவில்லை. அவர்களை சிறையில் அடைப்பதே ஜனாதிபதி மற்றும் எங்களதும் கடமையாகும்.

சாதாரண பொது மக்களை திருடர்கள் என்று கூறக் கூடாது. நிதியை தடுத்து நிறுத்துவதற்கு ஜனாதிபதியால் முடியாது. நிதியை விடுவிக்கவும், தடுத்து நிறுத்தவும் பாராளுமன்றத்துக்கே அதிகாரம் இருக்கிறது. நிதி பற்றிய குழுவின் தலைவர் என்ற வகையிலேயே எனது நிலைப்பாடுகளை முன்வைக்கிறேன். சாதாரண பொது மக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்.

சாமர சம்பத் விவகாரத்தில் ரணில் மீது தவறு இருக்குமாக இருந்தால் கைதுசெய்ய வேண்டியது அவசியமாகும். கடந்த தேர்தலுக்கு முன்னர் விசா பிரச்சினையை பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலேயே வெளிக்கொண்டுவந்தேன்.

அதனை ஜனாதிபதி அறிந்திருப்பார் என்று கருதுகிறேன். தற்போது கோப் குழுவின் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக கூறுகிறார். முதலில் நாங்களே இணைய விசா விவகாரம் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்தோம்.

ரவூப் ஹக்கீம், சுமந்திரன், பாட்டலி சம்பிக்க ரணவக்கவுமே என்னால் சமர்ப்பிக்கப்பட்ட 165 பக்கங்களைக் கொண்ட ஆவணங்களை உயர் நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றார்கள். அதனால், அந்த திருடர்கள் குறித்து தேடிப் பார்க்க வேண்டும். ஆனால் அது தொடர்பில் எந்த கதையும் இல்லை என்றார்.

## வாக்காளர் அட்டை...

தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் 4,000 வரையிலான கண்காணிப்பாளர்களை பணிக்கமர்த்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவு செய்யப்பட்ட வாக்களிப்பு நிலையங்களை கண்காணிக்கவும், வாக்களிப்பு தினத்தன்று 3,000 இற்கும் அதிகமான கண்காணிப்பாளர்களையும் 200 இற்கும் அதிகமான கண்காணிப்பு வாகனங்களை கடமைக்கு அமர்த்த பெவ்ரல் அமைப்பு திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றுவரை வாக்காளர் அட்டை கிடைக்காத வாக்காளர் அவர்களுக்குரிய வாக்காளர் அட்டைகளை அவர்களுக்குரிய தபால் நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## 1/3 பங்கினர் ஏழ்மையில்...

விலைகளைக் குறைப்போம் என தெரிவித்தனர். ஆனால், இன்று பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்து காணப்படுகின்றன. மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைக் கூட வழங்க முடியாத ஆட்சி யொன்றே இன்று உதயமாகியுள்ளது. ரூ. 9000 மின்சாரக் கட்டணத்தை ரூ. 6000 ஆக மாற்றி 33% ஆல் குறைப்போம் என வாக்குறுதி வழங்கியிருந்தனர்.

ஊழல், மோசடி, களவுகளை ஒழிப்போம் என பிரஸ்தாபித்தனர். எரிபொருள் விலையைக் குறைப்போம் என்றனர். பாடசாலை உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான VAT வரியை நீக்குவோம் என்றனர். இதுவரை நடந்தது ஒன்றும் இல்லை.

**உலக வங்கியின் புதிய அறிக்கையின் பிரகாரம், நாட்டின் 1/3 பங்கினர் ஏழ்மையில்**

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு உரிய நேரத்தில் உர மானியம் கிடைத்தபாடில்லை. பயிர்களுக்கு மானியம் வழங்கப்படும் என தேர்தல் மேடைகளில் கூறி வருகின்றனர். இந்த அரசாங்கம் எப்பொழுதும் ஏதாவது பொய்களை கூறி மக்களை ஏமாற்றி அவர்களின் மனதை வெல்வதற்காகவே முயற்சித்து வருகிறது. தற்போது பழைய பொய்களை தவிர்த்து புதிய பொய்களையும் கூறி, மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

எமது நாட்டில் வறுமை 33% ஆக காணப்படுகின்றன என உலக வங்கியின் புதிய அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. நாட்டின் பொருளாதாரம் சரியாகிவிட்டது என அரசாங்கம் தெரிவித்தாலும், நாட்டின் 1/3 பங்கினர் ஏழ்மையோடே வாழ்ந்து வருகின்றனர் என உலக வங்கி புதிய தரவுகளோடு சுட்டிக்காட்டுகிறது.

இந்த வறுமையை ஒழிப்பதற்கான புதிய வேலைத்திட்டம் எதனையும் இதுவரையில் இந்த அரசாங்கம் முன்வைக்கவில்லை.

**அரசாங்கத்தின் இறுதி துருப்புச் சீட்டு**

திசைகாட்டி அதிகாரத்தைப் பெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே நிதி வழங்குவோம் என அரசின் கடைசி துருப்புச் சீட்டை வெளிப்படுத்தியுள்ளனர். உள்ளூர் அதிகார சபை சட்டமூலங்களைக் கூட புரிந்து கொள்ளாத ஒருவரே நாட்டின் ஜனாதிபதியாக இருந்து வருகிறார்.

தற்போது ஜே.வி.பிக்கு மாத்திரம் தலைவராக இருந்துகொண்டு பக்கச்சார்பான அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## அனுமதியின்றி...

அந்தக் கட்சியின் பிரதானிகளுக்கு விரைந்து அறிவித்து அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கு மாறும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்தே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும்,

அத்தனகல்ல பிரதேச சபை அதிகார பிரதேசத்துக்குள் 'கதிரை சின்னத்தில்' தேர்தலில் போட்டியிடும் "பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்கள் சிலர் அந்த பிரதேசம் முழுவதும் எனது புகைப்படத்துடன் லசந்த அழகியவன்ன மற்றும் சரண குணவர்தன ஆகியோரின் புகைப்படத்துடன் துண்டுபிரசுரங்களை வீட்டுக்கு வீடு பகிர்ந்துகொண்டிருப்பதாகவும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

இதுபோன்று துண்டுபிரசுரங்களை விநியோகிப்பது அல்லது போஸ்டர்களை அச்சிடுதல் போன்ற செயற்பாடுகளுக்கு என்னிடம் அனுமதி பெறவில்லை. அதேபோன்று எனது பெயர் மற்றும் புகைப்படம் என்பவற்றை எந்தவொரு ஒளி, ஒலி பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டாமென்பதுடன், அத்தனகல்ல மற்றும் ஏனைய பிரதேசங்களில் கதிரை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் அமைப்புகளுக்கும் தெளிவாக அறிவித்துள்ளேன்.

அவ்வாறிருக்கையில், அவசியமின்றி எனது பெயர் மற்றும் புகைப்படம் என்பவற்றை பயன்படுத்தி நான் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கூறுவது தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறுவதென்பதால் அவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு விரைவாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதானிகளுக்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன், தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கோருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## தற்கொலை...

மைத்ரிபால சிறிசேனவை கொலை செய்யும் நோக்கில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில் சட்டமா அதிபரினால் பிரதிவாதிகள் இருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ். சபுவிதவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்போது, இதற்கு முன்னர் வழங்கப்பட்ட அறிவிப்புக்கமையவே சாட்சியாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

அதற்கமைய, அந்த வழக்கில் முதலாவது சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிடம் வாக்கு மூலம் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவரை விடுவிப்பதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## பிரசன்ன ரணவீரவின்...

நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர்களான மேர்வின் சில்வா உள்ளிட்ட சிலரை தற்போது வரையில் மஹர நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# கண்டி தலதா யாத்திரைக்கு வருகை தந்த பக்தர்கள் விட்டுச்சென்ற பயணப் பொதிகள் மீளக் கையளிப்பு





(எம்.ஏ.அமீனுல்லா)

ஸ்ரீ தலதா மாளிகை யாத்திரைக்கு வருகை தந்த பக்தர்கள் விட்டுச் சென்ற பயணப் பொதிகளை கண்டி வாவிக்கருகாமையிலுள்ள ஜோய் படகு சேவைக்கு முன்பாக இன்று (29) பெற்றுக்கொள்ள முடியும் என சிவில் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

10 நாள் புனித தந்ததாது யாத்திரைக்கு வந்த பக்தர்களின் பயணப் பொதிகள் சிவில் பாதுகாப்புத் துறையின் மேற்பார்வையில் அவர்களின் பாதுகாப்பில் வைக்கப்பட்டு யாத்திரைக்குப் பிறகு அவற்றின் உரிமையாளர்களிடம் திருப்பி வழங்கப்பட்டிருந்தன

இந்த மாபெரும் நிகழ்வில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டமையினால் சிலர் தாங்கள் சென்ற வரிசையில் தமது பயணப்பொதிகளை விட்டுச் சென்றதுடன், சிலர் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைத்த பயணப் பொதிகளை மீளப்பெறாமலும் சென்றுள்ளனர்.

இவ்வாறு குவிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பொதிகள் இப்போது சிவில் பாதுகாப்புத் துறையின் பாதுகாப்பில் உள்ளன, மேலும் அவற்றை அருகிலுள்ள ஜோய் படகு சேவைக்கருகாமையில் சேகரித்து வழங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தங்கள் அடையாளத்தை சரிபார்த்து இந்த பைகளை பெற்றுக்கொள்ளுமாறு பாதுகாப்புத் துறை கேட்டுக்கொள்கிறது.

இது தொடர்பான விவரங்களை 0715803000 / 0775311797 / 0710965890 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

## கண்டி மாநகரில்...

கண்டி நகரில் கடந்த 10 நாட்களில் 606 தொன் கழிவு சேர்ந்துள்ளது. அவற்றில் 465 தொன் கழிவு கலப்படமான கழிவுத்தொகை. ஏனைய 102 தொன் கழவு பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் என்பன அடங்குகின்றன. மேலும் 35 தொன் உணவுக் கழிவுகளாக இருந்தன. நூற்றுக்கு 90 சதவீதம் கலப்படமான கழிவுகளாக இருப்பதால் அவற்றை முறையாக அகற்றுவதில் பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாக கண்டி மாநகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ பிரதானி நாமல் தம்மிக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று (28) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கழிவுகளை அகற்றுவது தொடர்பில் நகர சபையிடம் முறையாக வேலைத்திட்டங்கள் இருந்தன. அதற்காக பல்வேறு முயற்சிகளையும் எடுத்தோம். கடந்த 10 நாட்களில் நேற்று முன்தினம் (27) இரவாகும்போது 606 தொன் கழிவு கண்டியில் சேர்ந்துள்ளது. அவற்றில் 465 தொன் கழிவு கலப்படமான கழிவுத்தொகை. ஏனைய 102 தொன் கழிவு பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் என்பன அடங்குகின்றன. மேலும் 35 தொன் உணவுக் கழிவுகளாக இருந்தன. நூற்றுக்கு 90 சதவீதம் கலக்கப்பட்ட கழிவுகளாகவே இருக்கின்றன.

ஒன்றரை வருடங்களுக்கு மேல் நகரில் குப்பைகளை முறையாக சேர்த்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தாலும் கலப்பு கழிவுகளை அகற்றியதில்லை. இருந்தபோதும் 30 வரையான பணியாளர்களை இணைத்துக்கொண்டு இரவு நேரத்தில் ஓரளவு கழிவுகளை வகைப்படுத்த முயற்சித்து வருகிறோம். இருந்தபோதும் 600 தொன் கழிவுத் தொகையை வகைப் படுத்துவது இலகுவாக விடயமல்ல.

மாநகர சபையிலிருந்து 120 வரையான பணியாளர்களையே இதற்கு பயன்படுத்திக்கொண்டோம். மேலும் மக்கள் சுயேச்சையாகவும் கழிவகற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் கண்டி மாநகர ஆணையாளர் இந்திக்கா குமாரி அபேசிங்க கருத்து தெரிவிக்கையில்,

கழிவகற்றல் தொடர்பில் எங்களிடம் முறையான வேலைத்திட்டம் இருந்தது. ஆனால், இதுபோன்ற பரபரப்பான சந்தர்ப்பங்களில் அதனை நிறைவேற்ற முடியாது. அதனால், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த கண்டி மாநகர சபையிலிருந்து கழிவுகளை முழுமையாக அகற்றுவதே எங்களின் முதல் கடமையாக இருந்தது. பிரிக்கப்பட் டதாக குப்பைகளை தனித்தனியாக பிரித்தெடுப்பதி லேயே சிக்கல் இருக்கிறது. இதற்கு தீர்வைக் காணவேண்டும். கொழும்பு மாநகர சபையுடன் கலந்துரையாடி இதற்கு தீர்வுகாண நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பணியாளர்களும் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளார்கள். அவர்களையும் அவர்களின் சுகாதாரத்தையும் பாதுகாக்க வேண்டும் என்பதால் பணியாளர்களினூடாக இதனை செய்ய முடியாது. அதன் காரணமாக கொழும்பு மாநகர சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தி, கிளீன் ஸ்ரீ லங்கா அலுவலகத்துடன் கலந்துரையாடி முறையான தீர்வொன்றுக்கு செல்ல எதிர்பார்ப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## இளைஞர் கொலையில்...

2012ஆம் ஆண்டு மட்டக்குளியில் உள்ள ஒரு கோவிலுக்கு அருகில் 21வயது திருமணமாகாத இளைஞரை விக்கெட் கம்பங்கள் மற்றும் தடிகளால் அடித்துக் கொன்ற வழக்கில் ஐந்து பிரதிவாதிகளுக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க நேற்று (28) தீர்ப்பளித்தார். மேலும் இரண்டு பிரதிவாதிகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றம் நடந்தபோது அவர்கள் 18 வயதுக்குக் குறைவானவர்களாக இருந்ததால், இரண்டு பிரதிவாதிகளுக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்படுவதாக நீதிபதி அறிவித்தார். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மற்ற இரண்டு பிரதிவாதிகள் முன்னதாக வழக்கு விசாரணை நடந்த காலகட்டங்களில் இறந்து விட்டனர்.

நீண்ட விசாரணைக்குப் பிறகு தீர்ப்பை அறிவித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க, பிரதிவாதிகள் மீதான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பு நிரூபித்துள்ளதாகக் கூறினார். அதன்படி, பிரதிவாதிகள் மூன்று குற்றச்சாட்டு களில் குற்றவாளிகளாகக் காணப்படுவதாக என்று நீதிபதி கூறினார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு பிரதிவாதியும், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு பிரதிவாதியும் தந்தை மற்றும் மகன் என்பதும் விசாரணையின்போது தெரியவந்தது.

2012 செப்டெம்பர் 26ஆம் திகதி மட்டக்குளி, தொட்டுபொலவில் உள்ள ஒரு கோவிலுக்கு அருகில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட தகராறில், 21 வயது திருமணமாகாத இளைஞரான பிரான்சிஸ் சுரஞ்சன் குரூஸை விக்கெட் கம்பங்கள் மற்றும் தடிகளால் அடித்துக் கொன்றது உட்பட மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபர் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார்.

## ஆணைக்குழு...

"என் மீதான விசாரணைகள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மக்கள் சந்திப்புகளில் முன்வைத்திருந்த கருத்துகளின் அடிப்படையில் பார்த்தால், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு நான் அனுப்பிவைத்த கடிதத்தை பார்த்துள்ளார். அவ்வாறெனில் இந்த ஆணைக்குழுவின் ஆவணங்களை அலுவலகத்திலிருந்து ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் பெற்றுக்கொள் கிறார் என்பதே பொருளாகும்" என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று (28) இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு சென்றிருந்தார்.

நேற்று காலை 9.15 மணியளவில் ஆணைக் குழுவில் ஆஜரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று மணிநேர விசாரணையின் பின்னர் அங்கிருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, ஊவா மாகாண முதலமைச்சராக இருந்த காலபகுதியில் சேமிப்பு வங்கி கணக்கிலிருந்த வைப்பு கணக்கு; தொகையை நீக்கியதனூடாக இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில், வாக்குமூலம் வழங்குவதற்காக ரணில் விக்கிர மசிங்கவுக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமையவே அவர் நேற்று ஆஜராகியிருந்தார்.

அதன்பின்னர் கொழும்பில் நேற்று (28) விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நான் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்குச் சென்றிருந்தேன். சட்டத் தரணிகளும் என்னுடன் வந்திருந்தார்கள். இதற்கு முன்னர் ஏப்ரல் 10ஆம் திகதி எனது ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நான் அறிந்து வைத்துள்ளதால் இந்த சம்பவத்தில் நானும் ஒருவகையில் தொடர்புபட்டுள்ளதாக தெரிவித்து, கடந்த 11ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கு அடுத்த வாரத்தில் நான் கொழும்பில் இருக்காமையின் காரணமாகவும், புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு சென்றிருந்ததன் காரணமாகவும், எனது சட்டத்தரணிகள் வெளிநாடு சென்றிருந்ததாலும் தற்போது ஆஜராக முடியாது. பிரிதொரு தினத்தில் வருவதாக அறிவித்திருந்தேன். அதன் பின்னர் 21ஆம் திகதி இரண்டாவது கடிதமும் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதில் 25ஆம் திகதி என்னை ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் எனது சட்டத்தரணி நாட்டில் இருக்கவில்லை.

மேலும். இந்த விவகாரத்தில் எனக்கு தெரிந்த தகவல்களை வழங்குமாறும் குறிப்பிட்டிருந்தார்கள். அதனைத் தொடர்ந்து 22ஆம் திகதி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 25ஆம் திகதி ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல் இந்த ஆவணங்களை வெளிநபர்களுக்கு காட்டுவதற்கு எதிர்ப் பையும் தெரிவித்திருந்தேன். 11ஆம் திகதி மட்டக்களப்பில் வைத்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்வைத்த கருத்துகளின் அடிப்படையில் பார்த்தால் அவரும் இந்த கடிதத்தை பார்த்துள்ளார். அவ்வாறெனில் இந்த ஆணைக்குழுவின் ஆவணங்களை அலுவலகத்திலிருந்து ஜனாதிபதி பெற்றுக்கொள்கிறார்.

அதனால், எனக்கு நீதி கிடைக்குமா என்பது தெரியாது. எனவே தயவுசெய்து எனது சட்டத்தரணிகள் ஆணைக்குழுவை சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கோரினேன். எது எவ்வாறாக இருந்தாலும் கேள்விகளுக்கு பதிலளித்திருந்தேன்.

நான் அறிந்தவகையில், மத்திய அரசு மாகாண சபைக்காக செலவுசெய்ய வேண்டிய மொத்த தொகை, கடன் தொகை, செலவு செய்யவேண்டிய துறைகள் என்பன சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வேலைத்திட்டங்களின் கீழ் குறித்த அமைச்சு, திணைக்களம் மற்றும் வேலைத்திட்டத்துக்காக நிதி ஒதுக்கீடு செய்யமுடியும் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, ஒருசில காரணங்களை மாற்றியமைக்க முடியும். ஆனால், அனுமதியளித்தால் மாத்திரமே நடைமுறையில் கணக்குக்கு மாற்ற முடியுமென்று எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. பாராளுமன்றம் அல்லது மாகாண சபை ஒதுக்கீட்டு சட்டத்தில் சட்டபூர்வ அனுமதி வழங்கவில்லை என்றால் அதனை நடைமுறை கணக்கில் வைக்க முடியாது. இந்த வருடங்களில் மத்திய அரசு நடைமுறைக் கணக்கில் வைக்க இடமளிக்காது.

இந்த நிதி ஏதாவது அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு செலவு செய்தாலும் அது பொருளாதாரத்துக்கே பங்களிக்கும். பொருளாதாரத்துக்கு நிதிப் பங்களிப்பு செய்தால் மாத்திரமே பொருளாதாரம் வளர்ச்சி பெறும். இந்த சகல நிதியையும் வைப்புக் கணக்கில் வைத்தால் என்னவாகும்? முறையாகவே நாங்கள் செயற்பட்டிருந்தோம்.

இந்த விவகாரத்தின் அடிப்படையில் பார்த்தால் திறைசேரி செயலாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நேரிடும். வைப்புக் கணக்குகளிலிருந்து நிதியை விடுவிப்பது அவ்வளவு பெரிய குற்றமில்லை. வாய்ப்பில்லாத சந்தர்ப்பத்தில் வைப்புக் கணக்குகளில் நிதியை வைப்பிலிடுவதே தவறு என்று கருதுகிறேன். செலவுகளுக்கு வழங்குமாறு நிதிகொடுத்து அதனை செலவுக்கு கொடுக்காமல் வைப்புக் கணக்கில் வைத்தால் என்னவாகும். அது தவறாக அமையும்.

நான் அறிந்த வகையில் இதில் தவறு இல்லை. இதுதொடர்பில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆணைக்குழுவுக்கு விளக்கமளித்துள்ளேன். என்னவாகின்றது என்பது தெரியவில்லை. எனது கருத்துக்களை யாருக்கு காண்பிப்பார்கள் என்பதும் எனக்கு தெரியாது. என்னால் இதனை மாத்திரமே கூறமுடியும் என்றார்.

# தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** ஞாபக மறதியால் அவதிப்படுவீர்கள். மனதில் எண்ணற்ற சிந்தனைகள் அலைபாய்ந்த வண்ணமிருக்கும்.

**ரிஷபம்** மன உளைச்சல் இருக்கும். செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுங்கள்.

**மிதுனம்** வீண் மனக்கவலைகள் வேண்டாம். எல்லாம் நல்லதற்கே என்று நினைத்து அமைதி கொள்ளுங்கள்.

**கடகம்** உடல், மனம் அமைதியாக இருக்கும். நினைத்ததை இன்று சாதிப்பீர்கள். தன வரவு உண்டு.

**சிம்மம்** பயணங்கள் அதிகரிக்கும். உடல் நோய்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். தொழிலில் சாமாளிப்பீர்கள்.

**கன்னி** சுப செய்திகளால் மன மகிழ்ச்சியடைவீர்கள். கடவுள் வழிபாட்டில் மனதைச் செலுத்துவீர்கள்.

**துலாம்** மௌனம் காப்பது அவசியம். நீங்களே உங்கள் மனதைக் கெடுத்துக்கொள்வீர்கள்.

**விருச்சிகம்** காதல் சுற்றுலா செல்வீர்கள். ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பெண்கள் உதவுவார்கள்.

**தனுசு** வீண் டென்ஷன் வேண்டாம். தேவையற்ற கோபங்களால் மனக் குழப்பமும் பகையும் ஏற்படும்.

**மகரம்** தெளிந்த மனதுடன் இன்று அனைத்தையும் சாதிப்பீர்கள். குழந்தைகளால் நன்மையும் புகழும் உண்டு.

**கும்பம்** நீங்கள் நினைத்த பயணத்தால் மகிழ்ச்சியும் இலாபமும் அடைவீர்கள். தாய்வழி உதவிகள் உண்டு.

**மீனம்** சதோதர வகையில் நன்மை உண்டு. தைரியத்துடன் சவால்களை வெற்றி கொள்வீர்கள்.

| | |
|---|---|
| **திதி:** | துவிதியை பி.ப.5.31 வரை பின் திருதியை |
| **நட்சத்திரம்:** | கார்த்திகை மு.இ.6.47 வரை பின் ரோஹிணி |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம்:** | மரணயோகம் மு.இ.6.47 வரை பின் அமிர்த யோகம் |
| **வார சூலை:** | வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்:** | காலை- 7.57 – 8.57 மணி வரை<br>பகல்- 11.57 –12.57 மணி வரை<br>மாலை- 3.57 – 5.57 மணி வரை |
| **ராகு காலம்:** | 2.57 – 4.27 மணி வரை |
| **எமகண்டம் :** | 8.57 – 10.27 மணி வரை |
| **குளிகை :** | 11.57 – 1.27 மணி வரை |
| **சந்திராஷ்டமம்:** | துலாம் ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முன்னிரவு 6.47 மணி வரை**
பரணி, ரோஹிணி,மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அத்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முன்னிரவு 6.47 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்தரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நடசத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்:** கார்த்திகை விரதம்.



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

# வெள்ளத்தில் மூழ்கியது நுவரெலியா





**(செ.திவாகரன்)**

நுவரெலியாவில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் தொடர்ச்சியாக பிற்பகல் நேரத்தில் கன மழை பெய்து வருகின்றது. நேற்று (28) திங்கட்கிழமை பெய்த மழையால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், போக்குவரத்துப் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் அடைமழையால் நுவரெலியாவில் அதிகமான தாழ்நிலப் பகுதிகள் முற்றாக மூழ்கியுள்ளன. அத்துடன், பிரதான வீதிகள் சில மழை நீரால் நிரம்பியுள்ளதுடன், நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் சிபெட்கோ எரிபொருள் நிலையத்துக்கு முன்பகுதி வெள்ளத்தில் மூழ்கியதால் போக்குவரத்து சில மணித்தியாலயத்துக்கு மேல் முற்றாகத் துண்டிக்கப்பட்டது. இதேவேளை, நுவரெலியா - உடப்புசல்லாவ, நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதிகளின் போக்குவரத்தும் முற்றாகப் பாதிக்கப்பட்டது.

மேலும் நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெஸ்போட், கிளாரண்டன்,கிரிமிட்டி ஆகிய பகுதிகளில் தொடர்ந்து பெய்த மழையால் வெள்ளம் ஏற்பட்டு பிரதான வீதிகளும் அதிக குடியிருப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் குறிப்பாக, அதிக மழைவீழ்ச்சியால் நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறித் தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியதால் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் நுவரெலியா – கந்தப்பளை பகுதிகளில் கடும் மழை காரணமாக பெருமளவான மரக்கறித் தோட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

நுவரெலியா பிரதான நகரில் வர்த்தக நிலையங்களில் வெள்ளநீர் புகுந்ததால் வியாபாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, தோட்டங்களை அண்டிய வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது. பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்குடன் பாரிய மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

# காணாமலாக்கப்பட்டோர் குறித்த பிரச்சினையை புதிய அரசு திட்டமிட்டு அழிக்க முயற்சிக்கிறது

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத் தலைவி அமலநாயகி அமல்ராஜ்**




**(வீரமுனை செய்தியாளர்)**

புதிய அரசாங்கம் தேர்தலை நடத்துவதை மட்டுமே வேலைத் திட்டங்களாக கொண்டுள்ளதுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்திற்குள் திட்டமிட்டு புகுத்தி தமது போராட்டத்தை இல்லாமல் செய்யும் முயற்சியை புதிய அரசு முன்னெடுத்து வருவதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி திருமதி அமலநாயகி அமல்ராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் இன்று (28) காலை நடைபெற்றது.

மட்டக்களப்பு அமெரிக்க மிசன் மண்டபத்தில் மட்டக்கள்ப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி திருமதி அமலநாயகி அமல்ராஜ் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்துகொண்டனர்.

இதன்போது தலைவராக மீண்டும் திருமதி அமலநாயகி அமல்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார்.

செயலாளராக திருமதி ராஜன் தேவகி தெரிசெய்யப்பட்டதுடன் பொருளாளராக ரவிச்சந்திரன் வினோஜியா தெரிவுசெய்யப்பட்டார்.

சங்கத்தின் உபதலைவராக வீ.குருகுல சிங்கம் தெரிவு செய்யப்பட்டதுடன் உபசெயலாளராக செ.திலகவதி தெரி செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு பகுதிகளுக்குமான இணைப் பாளர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஆலோசனைக்குழுவும் அமைக்கப் பட்டது.

நிர்வாக தெரிவினை தொடர்ந்து சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்து கருத்துப்பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி,

எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கேட்கவேண்டிய காலசூழ்நிலையிலிருக்கின்றோம். தற்போதுள்ள ஆட்சிமாற்றத்திலும் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம்.புதிய ஆட்சிவந்ததும் ஏதோ புதிய ஆட்சிவந்துள்ளது எங்களுக்கு அனைத்தும் கிடைத்துவிட்டது என்று நீங்கள் ஒருபோதும் கனவு காணவேண்டாம்.


கடந்தகால ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றி எவ்வாறு எமது இனத்தினை அழித்தார்களோ அதனைவிட படுமோசமான அரசியல் வியூகத்திற்குள்ளேயே நாங்கள் தற்போது நின்றுகொண்டிருக்கின்றோம்.காணாமல்ஆக்கப்பட்டோர் விடயப்பரப்பிற்குள் பல விடயங்களை செய்யப்போகின்றோம்,உண்மையினை கண்டறியப்போகின்றோம் நியாயங்களை சொல்வோம் என்று கூறி ஆட்சிக்குவந்தவர்கள் மூன்று தேர்தல்களை நடாத்தியது மட்டுமே வேலைத்திட்டமாக இருந்ததே தவிர காணாமல்ஆக்கப்பட்டவர்கள் விடயத்தினை வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை காணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்திற்குள் திட்டமிட்டு புகுத்தி தமது போராட்டத்தினை இல்லாமல்செய்யும் முயற்சியை திட்டமிட்டு முன்னெடுத்துவருகின்றது.

நாங்கள் கேட்டுக்கொண்டிருப்பது உள்ளகப்பொறிமுறை அல்ல.சர்வதேச நீதிப்பொறிமுறையினையே நாங்கள் கேட்டுநிற்கின்றோம்.எங்களது போராட்டங்களின் வடிவங்களே இன்று சர்வதேச அழுத்தம் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்கப்படுகின்றது. அதன்காரணமாகவே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகத்தினை ஒரு மாயையாக காட்டி எமது போராட்டத்தினையையும் கோரிக்கையினையும் முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் தங்களை நல்லரசாக காட்ட சிங்கள அரசு முயற்சிக்கின்றது.இது தொடர்பில் நாங்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

இன்று பல்வேறுபட்டவர்கள் வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்திற்குள் வந்து அதற்குள் பிளவுகளை ஏற்படுத்தி அதனை தங்களுக்கு சார்பாக கையாண்டு தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி மனரீதியான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் உணர்வுகளை மழுங்கடிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.அரசாங்கம் மற்றும் அதன் புலனாய்வு கட்டமைப்புகள் சூழு;ச்சிகளை முன்னெடுத்துள்ள அதேநேரத்தில் எங்களுடன் அதிகளவின் பயணிக்கின்றவர்களும் இதனை பிளவுபடுத்தும் முயற்சியில் செயற்படுகின்றனர்.

நாங்கள் இன்று வீதியில் நின்று போராடுவது எங்களது சந்ததிகளுக்காக.எங்களுக்கு நடந்த இந்த அநியாயம்,அட்டூழியங்கள் எதிர் கால சமூகத்திற்கு வரக்கூடாது என்பதற்காகவே நாங்கள் போராடிவருகின்றோம்.

# கட்டுநாயக்க – மினுவங்கொட துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஐவர் கைது



**(அநுராதபுரம் நிருபர்)**

கட்டுநாயக்க மற்றும் மினுவங்கொட பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய பெண் சந்தேக நபர்கள் இருவர் உட்பட ஐந்து பேரை அநுராதபுரம் தம்புத்தேகம யாய - 03 பகுதியில் வைத்து ஐஸ் போதைப்பொருட்களுடன் விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அநுராதபுரம் முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய தம்புத்தேகம பொலிஸ் பிரிவின் யாய - 03 பகுதியில் நேற்று முன்தினம் (27) மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது கடந்த 22 ஆம் திகதி கட்டுநாயக்க ஆடியம்பலம பகுதியில் நபரொருவரை சுட்டுக் கொலை செய்வதற்கு முயற்சித்தல் மற்றும் 26ஆம் திகதி மினுவங்கொட பண்னடுவன பகுதியில் நபரொருவரை சுட்டுக் காயப்படுத்திய சம்பவங்களுடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் ஓட்டுனராக செயற்பட்ட பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட ஐந்துபேரைக் கைதுசெய்துள்ளதுடன் ஐஸ் போதைப்பொருள் 22 கிராம் 368 மில்லி கிராம் என்பவற்றுடன் முச்சக்கரவண்டியொன்றையும் பொலிஸ் அதிரடிப்படையின் அநுராதபுரம் முகாம் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 29, 42, 50, 52, 55 வயதுடைய நீர்கொழும்பு, கட்டுநாயக்க மற்றும் தம்புத்தேகம, மினுவங்கொட பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேகநபர்களை பொலிஸ் அதிரடிப்படையினர் கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பசவக்குளத்தில் நீராடச் சென்ற ஐவர் மீது மின்னல் தாக்குதல்

**(அநுராதபுரம் நிருபர்)**

அநுராதபுரம் பசவக்குளத்தில் (அபயவெவ) நீராடிக் கொண்டிருந்த பெண்ணொருவர் உட்பட ஐந்துபேர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் உடமளுவ பகுதியில் அமைந்துள்ள பசவக்குளத்தில் நேற்று முன்தினம் (27) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மின்னல் தாக்குதலுக்கு இலக்கானவர்களில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதென வைத்தியசாலை வட்டாரத் தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

இரத்தினபுரி, பயாகல மற்றும் வல்பொள பகுதியிலிருந்து அநுராதபுரம் புனித பூமிக்கு யாத்திரை சென்றவர்கள் சிலரே இவ்வனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளார்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டி குளத்தை சுத்தப்படுத்தும் பணி




பத்துநாட்கள் 'ஸ்ரீ தலதா வழிபாடு' நிறைவில் கண்டி குளத்தைச் சுத்தப்படுத்தும் பணியை கிளீன் ஸ்ரீலங்கா செயலகமும் கடற்படையும் இணைந்து முன்னெடுத்துள்ளன.

கண்டி குளத்தில் போடப்பட்டிருந்த பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் பைகள் உள்ளிட்ட கழிவுகளை அகற்றி சுத்தப்படுத்தி கண்டி குளம் வழமை நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

கடற்படை கொமாண்டர் வீரசேகர மற்றும் கெப்டன் சரித குணவத்த உள்ளிட்ட அதிகாரிகளின் தலைமையிலான குழு மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா, நீர்ப்பாசன மற்றும் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுத்த இந்தப் பணிக்கு தன்னார்வக் குழுக்கள் மற்றும் பொதுமக்களின ஆதரவும் குறைவின்றி கிடைத்தன.

கண்டி நகருக்கு வரும் உள்நாட்டு - வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை கண்டி குளம் பெரிதும் கவர்ந்திருப்பதோடு, பிளாஸ்ரிக் உள்ளிட்ட கழிவுகள் குளத்தில் கிடப்பதால் நீர் மூலங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்.

நாட்டுக்குள் சுற்றாடல், சமூக மற்றும் மனப்பான்மை ரீதியான மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதனூடாக சமூகத்தை மிக உயர்வான நிலைக்கு உயர்த்தி வைக்கும் நோக்கின் கீழ் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் சுற்றாடல் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்படுவதோடு, கழிவுகளற்ற சுற்றாடலைப் பேணவும் மக்கள் மத்தியில் மனப்பான்மையை மேம்படுத்துவதற்கான பல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன்படி, 'ஸ்ரீ தலதா வழிபாடு' உடன் இணைந்ததாக நாடளாவிய ரீதியில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் கண்டி நகரத்தை அண்மித்து 10 நாட்களாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

# கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்தில் வெடிகுண்டு அச்சத்தால் பரபரப்பு



கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்தில் வெடிகுண்டு அச்சத்தால் நேற்று (28) பெரும் பரபரப்பு ஏற்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டவரொருவர் மடிகணினியொன்றை தூதரகத்துக்கு வழங்கிவிட்டு அவசரமாக வெளியேறியதன் காரணமாக இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில், சிறப்பு அதிரடிப் படை, சிறப்பு அதிரடிப் படையின் வெடிகுண்டு செயலிழக்கும் பிரிவு மற்றும் கறுவாத்தோட்டப் பொலிஸார் உள்ளிட்ட தரப்பினர் உடனடியாக தூதரகத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட ஆரம்ப விசாரணைகளைத் தொடர்ந்து கறுவாத்தோட்டம் பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 ஏப்ரல் 29 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# கவனிக்கப்பட வேண்டிய உலக வங்கியின் எச்சரிக்கை

நாட்டில் மூன்றில் ஒரு பகுதியினர் வறுமையில் உள்ளனர் அல்லது மீண்டும் வறுமையில் விழும் அபாயத்தில் உள்ளனர் என்று உலக வங்கி தரப்பிலிருந்து வெளியாகியிருக்கும் அறிக்கையொன்று கூறுகின்றது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் 2022இல் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் நேர்சீராக வளர்ந்து வருவதாகக் கூறப்பட்டாலும், இந்த அறிக்கையானது இலங்கையைப் பொறுத்தவரை ஓர் அபாய எச்சரிக்கைதான்.

மாலைதீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கிப் பிரிவு இயக்குனர் டேவிட் சிஸ்லன் கடந்த 23ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில் அடுத்த ஆண்டு - 2026 இல் - நாட்டில் 3.1 வீதம் மிதமான பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் வணிகம், முதலீடு, பொருளாதாரப் போட்டித் தன்மை, பெண் தொழிலாளர்கள் பங்களிப்பை உறுதிப்படுத்தும் சீர்திருத்தங்கள் செய்யப்படுவது போன்றவை மிக அவசியமானவை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

நாட்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத்துறை வெளியிட்ட அறிக்கையின்படி கடந்த ஆண்டின் கடைசிக் காலாண்டில் பெண்கள் பெருமளவில் பொருளாதார ரீதியில் செயலற்றவர்களாக இருக்கின்றார்கள் என்பது தெளிவாகியிருக்கிறது. ஆறரை இலட்சத்துக்கும் அதிகமான பெண்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமான நிலையில் உள்ளனர். அவர்கள் தொழிலாளர் சந்தையில் வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள், வேலையற்றுக் காணப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

அனைத்து வயதினரிடையேயும் ஆண்களை விட பெண்களிடையே வேலையின்மை அதிகமாக உள்ளது என்பதைக் கணக்கெடுப்பு முடிவுகள் மேலும் வெளிப்படுத்துகின்றன. இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் நெருக்கடி தரும் அளவில் பற்றாக்குறையாக உள்ளதென்று கூறப்படுகிறது.

நாட்டில் வறுமை நிலை உயர்ந்து வருவதாக உலக வங்கியின் அறிக்கை கூறுகிறது. வேலையின்மை விகிதம் 25 வீதம் என்று கூறப்பட்டாலும் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களுக்கான வேலையின்மை - அதுவும் பெண்களுக்கான வேலையின்மை - அதிகம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

2019 இல் ஒருவருடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாளாந்தம் 6,966 ரூபா தேவையெனக் கணக்கிடப்பட்டது. இப்போது அது 134 சதவீதம் மேலதிகமாக அதிகரித்து 16,318 ரூபாவாக உயர்ந்துள்ளது.

கடந்த 05 ஆண்டுகளில் 05 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் உடல் பருமன் (வயதுக்கேற்ற எடை குறைவு) மற்றும் வளர்ச்சிக் குறைபாடு (வயதுக்கேற்ற உயரம் குறைவு) ஆகியவற்றால் பாதிக்கப்படும் சதவீதம் அதிகரித்துள்ளது.

இது ஊட்டச்சத்துக் குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது. இலங்கையில் ஊட்டச்சத்து நிலைமை தொடர்ச்சியான மற்றும் கவலைக்குரிய குறைபாட்டு நிலையை வெளிப்படுத்துகின்றது. போதுமான ஊட்டச்சத்து கிடைப்பதற்கான இடைவெளி அதிகரித்து வருகின்றதென்று உலக உணவுத் திட்டம் இலங்கை குறித்து வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் இலங்கையின் மோசமான பொருளாதார நிலைமை, வறுமை, மக்களின் பாதிப்பு ஆகியவற்றை அம்பலப்படுத்துவனவாக இருக்கின்றன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பில் உலக வங்கி குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகிறது. கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் முக்கிய பங்காளியாக இருந்து நிதி, கொள்கை ஆலோசனை, மற்றும் தொழில்நுட்ப உதவிகள் மூலம் பொருளாதார மீட்சி, உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வறுமை குறைப்பு ஆகியவற்றை ஊக்குவித்து வருகிறது.

2022 இல் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, உலக வங்கி நிதியுதவிகளை மறு ஒதுக்கீடு செய்து அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய உதவியது. மேலும், கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார நிலைப்படுத்தலுக்கு ஆலோசனைகளை வழங்கியது.

2024 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 5% ஆக உயர்ந்ததற்கு கட்டுமானம், சுற்றுலா மற்றும் தொழில்துறை மேம்பாட்டுக்கு உலக வங்கியின் உதவிகள் முக்கிய காரணமாக இருந்தன. உலக வங்கி, ஏற்றுமதி ஊக்குவிப்பு, வெளிநாட்டு முதலீடு ஈர்ப்பு மற்றும் பெண்களின் தொழில்படை பங்களிப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு கொள்கை ஆலோசனைகளை வழங்குகிறது. இவை நீண்டகால, நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானவை.

உலக வங்கி, இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கு முக்கிய பங்காற்றி வருகிறது. நிதியுதவிகள், கொள்கைச் சீர்திருத்தங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு மூலம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, சமூகப் பாதுகாப்பு மற்றும் மனித மூலதன மேம்பாட்டின் மூலம் வறுமையைக் குறைக்க உதவுகிறது. இருப்பினும், நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் மற்றும் முதலீடுகள் தேவை. உலக வங்கியின் ஆதரவுடன் இலங்கை இந்தச் சவால்களை எதிர்கொள்ள முயற்சித்து வருகிறது.

உலக வங்கியின் மேற்படி எச்சரிக்கையைக் கவனத்திற்கொண்டு அதற்கேற்ப திட்டங்களை இலங்கை அரசு வகுக்க வேண்டும்.

# உன்னை நீ அறிவாய்!

வாழ்க்கையைப் பற்றிச் சிந்திப்பதே வாழ்க்கை என்று வாழ்ந்துகொண்டிருக்கும் வாசகப் பெருமக்களே! வணக்கம்.

வாழ்க்கையின் ஒவ்வொரு செயல் அசைவிலும் நாம் கவனத்தோடு ஈடுபட வேண்டியது அவசியமானதாகும். ஏனெனில், நமது வாழ்க்கையே மதிப்புமிக்கதாகும். விழிப்பது தொடங்கி, உறங்கப்போவது வரை.... ஏன் உறங்கிய பின்னரும்கூட ஒவ்வொரு மனிதரும் தன்னைப்பற்றிய தனது அங்கங்களைப் பற்றிய, தனது செயல் அசைவுகளைப் பற்றிய மிகுந்த கவனத்தோடு வாழவேண்டியது அவசியமானதாகும். நமது அங்கங்களின் மதிப்புகளை நமது வாழ்வியல் செயற்பாடுகளின் மதிப்புகளை ஆழமான நம்பிக்கையோடு தீர்மானித்துக்கொண்டு அவற்றுக்கேற்ப சிந்தனைத் திறத்தோடு வாழத் தொடங்கினால் உண்மையிலேயே நாம் வாழ்வது மதிப்புமிக்க வாழ்க்கையாக ஆகிப்போகும்.

நம்முடைய வாழ்வின் மதிப்பு என்பது என்ன? நம்முடைய மதிப்பை எப்படி மதிப்பீடு செய்வது? எந்தத் தராசு கொண்டு நம்மை நிறுத்துப் பார்ப்பது? நம்மை மதிப்பீடு செய்யச் சரியான நபர் யார்? இப்படிப் பல கேள்விகளோடு மனிதர் ஒவ்வொருவரும் தம்மைப்பற்றிய மதிப்பீட்டுத் தேடலில் ஈடுபடத் தொடங்கலாம். உண்மையில் ஒவ்வொரு மனிதரும் தன்னை அறிந்து கொள்வதென்பது கூடத் தன்னைப் படைத்த கடவுளையே அறிந்து கொள்வதற்கு இணையானதாகும். இதையே இன்னொரு வகையில், தன்னை அறிதலே கடவுளறியும் தத்துவம் என்றும் கொள்ளலாம்.

ஓர் இளைஞன் திடீரெனக் கடவுளைக் காணவேண்டும் என்ற ஆவலோடு தவம் இயற்றத் தொடங்கினான். இளைஞனின் புதுமையான ஆவலைப் புரிந்துகொண்ட கடவுள், அவனை ரொம்பவும் சோதித்துக் காலம் தாழ்த்தாமல், திடீரென அவன் கண்முன்னே தோன்றிக் காட்சி கொடுத்து, “நான் தான் கடவுள்! உனக்கு என்ன வேண்டும்?” - என்று கேட்டார். அதற்கு அவன், ‘‘வாழ்க்கையின் மதிப்பு என்ன? இதைத் தெரிந்துகொள்ள மிக்க ஆவலாய் இருக்கிறேன்’’ - என்றான் இளைஞன். கடவுள் அந்த இளைஞனின் கையில் ஒரு சிறிய கல்லைக் கொடுத்து, ‘‘இதைக் கொண்டுபோய் ஊருக்குள் இருக்கும் வணிகப் பெருமக்களிடம் இதன் மதிப்பு எவ்வளவென்று அறிந்து வா. சாதாரண வீதியோர வியாபாரி தொடங்கி, நகரின் மிகப்பெரிய வைர வியாபாரி வரை சென்று மதிப்பை விசாரி. ஆனால், யாரிடமும் விற்றுவிடாதே. ஒவ்வொருவரும் சொல்லும் மதிப்பீட்டைக் கேட்டுக்கொண்டு வந்து என்னிடம் சொல். பிறகு நான் வாழ்க்கையின் மதிப்பைப் பற்றிச் சொல்கிறேன்!” - என்றார் கடவுள்.

கல்லைப் பெற்றுக்கொண்டு கடைவீதிக்குச் சென்ற இளைஞன், ஓர் ஆரஞ்சுப்பழ வியாபாரியிடம் சென்று, கல்லைக் காண்பித்து,‘‘இதன் மதிப்பு எவ்வளவு?” - என்று கேட்டான். அந்தக் கல்லை இருமுறையும் இளைஞனை ஒருமுறையும் ஏற இறங்கப் பார்த்த ஆரஞ்சு வியாபாரி, ‘‘இந்தக் கல்லுக்கு, என்னிடமுள்ள ஆரஞ்சில் பன்னிரெண்டு பழங்கள் தரலாம். அவை தாம் இந்தக் கல்லுக்கான மதிப்பு” - என்றான்.

அந்த இடத்தைவிட்டு நகர்ந்த இளைஞன், கொஞ்சம் தொலைவில் இருந்த ஒரு காய்கறிக் கடைக்குச் சென்றான். வியாபாரியிடம், “இந்தக் கல்லின் மதிப்பு எவ்வளவு? இதைப் பெற்றுக்கொண்டு இதற்கு மாற்றாக நீ என்ன தருவாய்?” - என்று கேட்டான். கல்லை வாங்கிக் கல்லாப் பெட்டிக்குள் போட்டுக்கொண்ட காய்கறி வியாபாரி, ‘‘இதற்கு மாற்றாக, ஒரு சாக்குப்பை நிறைய உருளைக்கிழங்கு தருகிறேன். வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சமைத்துச் சாப்பிடு” - என்றான்.

காய்கறிக் கடைக்காரனிடம் கல்லைத் திரும்பப் பெற்றுக்கொண்ட இளைஞன் அதனை அருகிலிருந்த ஒரு பெரிய நகைக் கடைக்குக் கொண்டு சென்றான். கல்லை முழுமையாக ஆராய்ச்சி பண்ணிய நகைக்கடைக்காரர், ‘‘இந்தக் கல்லுக்கு மதிப்பாக என்னால் ஒரு இலட்சம் ரூபா காசாக வழங்க இயலும்” - என்று பெருமிதமாகச் சொன்னார். “வேண்டாம்..... இது கடவுள் தந்தனுப்பிய கல். வெறும் மதிப்பு மட்டுமே கேட்டு வரப் பணித்திருக்கிறார். கல்லைத் திருப்பித் தாருங்கள்’’- என்றான் இளைஞன். உடனே நகைக்கடைக்காரர், “மேலும் ஐம்பதினாயிரம் சேர்த்து, ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் தருகிறேன்” - என்று பேரம் பேசத் தொடங்கினார்.



கல்லை வாங்கிக் கொண்டு அந்த ஊரிலேயே மிகப்பெரிய வைர நகைக் கடைக்குச் சென்றான் இளைஞன். அங்குதான் அசல் அருவிலை மணிகள் எல்லாம் கிடைக்கும். கல்லைப் பெற்றுக்கொண்டு பரிசோதித்த வைர வியாபாரி, மிகுந்த மன மகிழ்ச்சியோடும், முக மலர்ச்சியோடும் இளைஞனைப் பார்த்துப் பேசினார். “இந்த விலை மதிக்க முடியாத கல்லை நீங்கள் எங்கிருந்து பெற்றீர்கள் என்பது பெரிய புதிராக இருக்கிறது. இந்தக் கல்லை மதிப்பிட்டு விலைபேசி விற்கவோ, வாங்கவோ இந்த மண்ணில் யாராலும் முடியாது. உலகம் முழுவதையும் விலையாகப் பேசித் தனது வாழ்நாளையும் யாரால் முழுமையாக ஒப்படைக்க இயலுமோ அவரால்கூட இந்தக் கல்லை வாங்கிவிட முடியாது. ஏனெனில், இந்த உலகிலேயே விலைமதிக்க முடியாத அரிய பொருள் இந்தக் கல்!” - என்றார்.

கல்லை வாங்கிக் கொண்டு மீண்டும் கடவுளிடம் போய் நின்றான் இளைஞன். நடந்ததையெல்லாம் விலாவாரியாக விளக்கிச் சொன்னான். மீண்டும் கேட்டான்,

‘‘வாழ்க்கையின் மதிப்பு என்ன? கடவுள் சிரித்துக்கொண்டே விளக்கத் தொடங்கினார். “நீ கொண்டு சென்ற கல் ஒன்றுதான். ஆனால், மதிப்பீடுகள் வெவ்வேறானவை. ஆரஞ்சுப்பழ வியாபாரி, காய்கறி வணிகர், நகைக் கடைக்காரர், வைர வியாபாரி இவர்கள் அனைவரிடமிருந்தும் நீ பெற்ற பதில்கள் தாம் உனது வாழ்க்கையின் மதிப்பைத் தீர்மானிக்கின்றன.

நீ உண்மையில் விலை மதிக்க முடியாத மதிப்பை உடைய வாழ்க்கைக்குச் சொந்தக்காரனாக இருக்கலாம். ஆனால், சிலர் பழக்கடைக்காரர், காய்கறிக்காரரைப் போல உன்னைக் குறைத்து மதிப்பிடக்கூடும். சிலர் நகைக் கடைக் காரரைப் போலச் சற்று உயர்த்தியும் மதிப்பீடு செய்யலாம். ஆனால், நமது வாழ்க்கையின் மதிப்பு, உலகில் எவர் மதிப்பீட்டையும் விஞ்சி நிற்கிற மதிப்பீடாகச், சிகரம் தாண்டிய உயரம் உடையதாகத் திகழ வேண்டும்.

உலகில் வாழ்க்கையின் மதிப்பு என்பது அவரவர் சிந்தையின், வாழ் தரத்தின் உயரம் சார்ந்ததாகவே அமைவு பெறுகின்றது. வெள்ளத்தனைய மலர்நீட்டம் போல மனிதர்களின் உள்ளத்தனையது உயர்வு என்று கூட வள்ளுவப்பெருந்தகை இதன் சீர்மையைப் பாராட்டுகிறார். அடுத்தவர் மதிப்பீடுகளாலேயே நம்முடைய வாழ்க்கையின் மதிப்பீடு அளவிடப்பெறுகிறது என்பது தவறான கணிப்பாகும். அடுத்தவர் போற்றும் வாழ்வாக நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்குமுன் முதலில் நாம் போற்றும் வாழ்வாக அது அமைகிறதா, நாம் விரும்பும் வாழ்க்கையாக அதனை மாற்றிக்கொள்ள முடிகிறதா என்பதில் அக்கறை செலுத்த வேண்டும்.

நம்மைப் பற்றிய மதிப்பை நாம் உயர்த்திக்கொள்வதன் மூலமாகத் தான் நமது வாழ்க்கையை மதிப்புமிக்க வாழ்க்கையாக வடிவமைத்துக்கொள்ள முடியும். நம்முடைய வாழ்க்கை குறித்த மதிப்பீட்டை முதலில் நமக்கு நாமே குறைத்து மதிப்பிடாமல் உயர்த்தி மதிப்பிடக் கற்றுக்கொள்ள வேண்டும். இது உயர் மனப்பான்மை அல்லது ஆணவப்போக்கு என்று கூட சிலர் எண்ணிப் பின்வாங்கலாம்.

ஆனால், எந்த நேரமும் தன்னைப்பற்றிய சோக மதிப்பீட்டிலேயே வாழ்க்கையை நடத்தினால், அது எப்போதும் மதிப்பு மிக்கதாக உயரவே உயராது. சிலருக்கு எப்போதும் அடுத்தவர்கள் அவரையே விடாது கண்காணித்துக் கொண்டிருப்பதாக எண்ணம் தோன்றும். அவர்களுக்காக வாழ்க்கையை வாழ்ந்தாக வேண்டுமே என்கிற பரபரப்புப் பற்றிக்கொள்ளும். தனக்கு எவருமே மதிப்பு மிக்க அங்கீகாரம் வழங்குவதில்லையே என்கிற கழிவிரக்கம் பற்றிக்கொண்டு, எந்தச் செயலிலுமே விரும்பி ஈடுபட முடியாத அளவுக்கு மனத்தை வெற்றிடம் தொற்றிக்கொள்ளும்.

இவற்றிலிருந்தெல்லாம் விடுபட்டு வெளிவருவதற்கு முதலில் தம்மைப் பற்றிய, தமது திறமைகளைப் பற்றிய மதிப்புகளில் நம்பிக்கை வைக்க வேண்டும். அடுத்தவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்கிற கவலையை அடிப்படையில் நம்மிடமிருந்து அகற்றி விட்டால் போதும். சுதந்திர உணர்வு நம்மிடம் இருந்து பொங்கிப் புறப்படத் தொடங்கும். அடுத்தவர் நம்மைப் பற்றிப் பேசுவதை வைத்தே உழப்பிக்கொண்டிராமல், மனம் இலகுவாகி விட்டால் நமது செயலிலும் சிந்தையிலும் தன்னம்பிக்கை ஊற்றெடுத்துக் கிளம்பி நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விடும்.

நம்மைப்பற்றி அடுத்தவர் நினைப்பது அப்புறம் இருக்கட்டும். முதலில் நம்மைப்பற்றி நாம் பெருமையாகக் கருதுவதற்குப் பயிற்சி பெறுவோம். நம்மை எப்போதும் நாமே குறைத்து மதிப்பிட்டுக் கொண்டிருந்தால் நம்முடைய செயல்களை, நம்முடைய மதிப்புகளை யார் பாராட்டுவார்? யார் கொண்டாடுவார்?.

இந்த உலகம் பொறாமையாளர்களின் கூடாரம். இந்த உலகில் நமக்கு இணையானவர்கள் மட்டுமல்ல, நம்மைவிடத் தகுதியில் குறைந்தவர்கள்கூட நமது வளர்ச்சிகண்டு பொறாமைப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, சில இடங்களில் நம்மைவிடத் தகுதியில் பெரியவர்கள் கூட நம்மைக்கண்டு பொறாமைப் படுகிறார்கள். பெரும்பான்மையும் பொறாமைக் கண் கொண்டு மட்டுமே காணப் பழகிவிட்டவர்களிடம் நம்மைப்பற்றி நல்ல மதிப்பீடுகளை எப்படி எதிர்பார்க்க முடியும்? அவர்கள் சொல்வது எப்படி சரியான மதிப்பீடுகளாக ஏற்றுக் கொள்ளப்படும்? எல்லா மதிப்பீடுகளும் அவர்களது அளவு கோல்களாலேயே அளக்கப்படுகின்றன.

நமக்கு இணையான அளவு கோல்களை நாம்தானே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நாம் ஈடுபடும் சின்னச்சின்னச் செயல்களை எல்லாம் பாராட்டக் கற்றுக்கொள்ளுங்கள். நிகழுகின்ற சின்னச் சின்னத் தவறுகளுக்கெல்லாம் வருந்துவதோடு மட்டுமல்லால், நேர்ந்துவிட்ட தவறு மீண்டும் நிகழாமல் இருக்க உறுதி பூணுங்கள். நம்மிடமுள்ள திறமைகளையெல்லாம் தன்னம்பிக்கையோடு நமது மதிப்புகளாக வெளிக்கொணர அயராது பாடுபடுங்கள்.

மனிதப்பிறப்பு மாண்புடைய பிறப்பு. அதன் ஒவ்வொரு செயலும் மதிப்பு மிக்கதாகவே இருக்கும். அடுத்தவர் நம்மைப் பார்த்துக் குறைகள் கூறலாம். திருத்தங்கள் செய்யச்சொல்லலாம். கண்ணை மூடிக்கொண்டு வாய்க்கு வந்தபடி பாராட்டி மகிழலாம்; நாம் எதற்குமே லாயக்கில்லை என்று தரைமட்டத்துக்கு அடித்தும் வீழ்த்தலாம். வருத்தப்படாதீர்கள். எதற்கும் வருத்தப்படாதீர்கள்.வீணான பாராட்டுக்கும் மயங்கிப் போகாதீர்கள். நம்முடைய உயரம் என்னவென்பது அடுத்தவர்களைவிட நமக்குத்தான் தெளிவாகத் தெரியும். தன்னம்பிக்கையோடு பயணப்படுங்கள்.

உலகம் உற்சாக உலகம்தான். ஆனால், அந்த உற்சாகம் அடுத்தவர் மூலமாக நூறு சதவீதம் வந்துவிடும் என்று மட்டும் எண்ணிவிடக்கூடாது. நம்முடைய மதிப்பை நன்றாகவே கணித்துவைக்கப் பழகிவிட்டால் அடுத்தவர் கணிப்புகளுக்குக் கலங்கவோ, களிப்பெய்தவோ அவசியமிருக்காது. மதிப்புமிக்கது வாழ்க்கை. அதை மேலும் மேலும் மதிப்புமிக்கதாக ஆக்க மதிப்புமிக்க செயல்களைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்க வேண்டும்.

**நன்றி - மாலைமலர்**

# இன்றைய நாளில்...

- 1946 – ஜப்பானின் முன்னாள் பிரதமர் இடெக்கி டோஜோ மற்றும் 28 முன்னாள் தலைவர்கள் போர்க் குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டனர்.
- 1986 – லொஸ் ஏஞ்சல்ஸ் நகர பொது நூலகம் தீப்பிடித்ததில் 4,00,000 நூல்கள் அழிந்தன.
- 1991 – பங்களாதேஷில், சிட்டகொங்கில் இடம்பெற்ற 155 கி.மீ./மணி வேக சூறாவளியில் 1,38,000 பேர் வரையில் உயிரிழந்தனர். 10 மில்லியன் பேர் வீடுகளை இழந்தனர்.
- 1995 – நவக்கிரி என்ற இடத்தில் இலங்கை இராணுவத்தினரின் அவ்ரோ விமானம் 50 படையினருடன் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1997 – 1993 வேதி ஆயுத உடன்படிக்கை அமுலுக்கு வந்தது. வேதி ஆயுதங்கள் தயாரிப்பு தடை செய்யப்பட்டது.
- 2007 – வான்புலிகளின் இரண்டு வான்கலங்கள் கொழும்புக்கு வடக்கே 3 மைல் தொலைவில் உள்ள கொலன்னாவை எண்ணெய்க் குதங்களையும் 10 மைல் தொலைவில் உள்ள கெரவலப்பிட்டி எண்ணெய்க் குதங்களையும் குண்டு வீசித் தாக்கின.

# நக்கல் நமசிவாயம்

*இந்த மத்தியவங்கி பிணைமுறி மோசடி கேஸுக்கெல்லாம் ரணிலை விசாரிக்க மாட்டாங்களோ ?*




# இலஞ்சம், ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு உள்ளக அலுவல்கள் அலகு

## யாழ். மாவட்ட செயலகத்தில் திறந்துவைப்பு







(பு.கஜிந்தன்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் எண்ணக்கருவுக்கமைய, இலஞ்சம் மற்றும் ஊழலினை முற்றாக ஒழிக்கும் செயற்றிட்டமான இலங்கையின் ஊழலை ஒழிக்கும் செயற்பாட்டு திட்டத்தை மாவட்ட மட்டத்தில் செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்டமாக பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை முறையிடுவதற்கு "உள்ளக அலுவல்கள் அலகு" எனும் பிரிவானது நேற்று (28) காலை 09.00 மணிக்கு உத்தியோகபூர்வமாக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் மாவட்டச் செயலகத்தில் திறந்துவைக்கப்பட்டது.

இவ் அலகினை திறந்துவைத்து உரையாற்றிய அரசாங்க அதிபர்,

''ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மாவட்ட மட்டத்தில் உள்ளக அலுவல்கள் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஊழல் செயற்பாடுகளை தடுப்பதாகவும் அதேவேளை அலுவலக செயற்பாடுகள் வெளிப்படுத்தன்மையுடையதாகவும் இருக்க வேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கு அமையவும், அதேவேளை பொதுமக்கள் மாவட்ட செயற்பாடுகள் தொடர்பாக முழுமையான விபரங்களை அறிந்து கொள்வதற்கும் குறிப்பாக அலுவலக நடைமுறைகள் தொடர்பாகவும் அல்லது ஏதாவது விடயங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்படுகின்றபோது இப் பிரிவை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள கூடியதாக இருப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதன் அடிப்படையில் நம்பகத்தன்மையான அலுவலகமாக மாற்றுவதற்கு பொதுமக்கள் முறைப்பாடுகளை முன்வைக்க விரும்பின் இந்த அலுவலகத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வெளிப்படுத்தன்மை மற்றும் ஊழலற்ற இலஞ்சமற்ற பிரதேசத்தை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், நிர்வாகத்தின் நடைமுறைகளை பின்பற்றுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதுடன், பொதுமக்கள் அவர்களின் பிரச்சினைகளை அணுகக்கூடியதாகவும் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்களுக்கான தகவல்களை வெளிக்கொணர வேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் உண்டு.

முன்பு அரச அலுவலகங்களில் வெளிப்படுத் தன்மை குறைவாக காணப்பட்டதாகவும் தகவல் அறியும் உரிமை சட்டம் வந்ததன் பின்னர் அனைத்து விடயங்களிலும் வெளிப்படைத்தன்மையுடன் வெளிக்கொணர வேண்டிய தேவை உள்ளதாகவும் 12 ஆண்டுகளுக்கு ஆவணங்களை பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், அரச உத்தியோகத்தர்களாகிய நாம் இதற்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் அலுவலகத்தில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதற்கு மேலதிகமாக இலஞ்சம் மற்றும் ஊழல் சரத்துகளை ஆராயும் ஆணைக்குழுவுக்கு அதன் விடயங்கள் அனுப்பப்படும் எனவும் தெரிவித்ததுடன், நிர்வாக நடைமுறைகளை மேலும் வலு சேர்ப்பதற்கு வினைத்திறனாக செயல்பட வேண்டும் எனவும் அதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் வழங்குமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பிரிவின் இணைப்பாளராக திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் அலுவலகத்தில் ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பாக கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்து மேலதிக நடவடிக்கைக்காக பரிந்துரை செய்யப்படும்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# மக்கள் பணத்தை திருடியோருக்கு மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது

## பெருந்தோட்ட பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்



(இரத்தினபுரி நிருபர்)

''இந்த நாட்டில் மக்களின் பணத்தை திருடியவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது. அவர்களுக்கு நிச்சயமாக தண்டனை வழங்கப்படும்'' என்று பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

காவத்தை அவுப்பை தலுகலை பிரிவில் நேற்று முன்தினம் (27) இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

''ஒரு சிலரின் அரசியல் தேவைக்காக மூடப்பட்ட காவத்தை அவுப்பை பிரஜாசக்தி நிலையத்தை அபிவிருத்தி செய்து அதை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கென பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் 27 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மலையகப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்காக பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் இம்முறை கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் பணிகள் யாவும் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இன்று நாட்டில் பாரிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. விவசாயி ஒருவர் மகன் இன்று நாட்டில் ஜனாதிபதியாக இருக்கின்றார். எனவேதான் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் கிராமப்புறங்களுக்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்வி மற்றும் சுகாதாரத்துக்கும் இம்முறை கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர வந்து ஆறு மாதமாகிவிட்டது. புதிய பாராளுமன்றம் தெரிவுசெய்யப்பட்டு நான்கு மாதமாகிவிட்டது. என்ன செய்தார்கள் என்று சிலர் கேள்வி கேட்கின்றார்கள்.

கடந்த கால ஆட்சியில் பிரதி அமைச்சர் ஒருவர் மலையகப் பிரதேசத்துக்கு வருகை தந்தால் அவர் பின்னால் எத்தனை வாகனங்கள் வந்திருக்கும். அது மட்டுமல்ல, எத்தனை பொலிஸார் அவரின் பின்னால் வந்திருப்பார்கள். இவை அனைத்தும் யாருடைய பணம், இவை பொது மக்களின் பணம். இதை இல்லாமல் செய்யவே மக்கள் எங்களுக்கு வாக்களித்தார்கள்.

கடந்தகால ஆட்சியில் மலையக தோட்ட மக்களுக்கு அஸ்வெசும தொகை முறையாக கிடைக்கவில்லை. அதுமட்டுமல்ல மலையக தோட்டப்பகுதிகளில் அஸ்வெசும தெரிவு முறையாக இடம்பெறவில்லை.

இன்று எமது அரசாங்கம் அஸ்வெசும தொகையை அதிகரித்துள்ளது. அஸ்வெசும இல்லாதவர்களுக்கு அஸ்வெசும வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. புதிதாக மூன்று இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் மூலம் மலையக மக்களுக்கு பத்தாயிரம் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. அதில் 1,500 வீடுகள் மாத்திரமே கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் அமைத்து கொடுத்துள்ளது. நாங்கள் இந்த வருடம் 5,700 வீடுகளை மலையக மக்களுக்கு அமைத்துக் கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

மலையக மக்களுக்கு அமைக்கப்பட உள்ள வீடு தனி வீடா, மாடி வீடா, கோடி வீடா என்று சிலர் கேள்வி கேட்கின்றார்கள். அத்துடன் மலையக இளைஞர் யுவதிகளின் தொழில் பயிற்சிக்காக 580 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்களால் விரட்டியடிக்கப்பட்ட மலையக அரசியல்வாதிகளுக்கு பயம் வந்து விட்டது. திருடர்களுக்கு பயம் வந்த படியால்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அவதூறு செய்கின்றார்கள். விரைவில் எல்லா திருடர்களும் உள்ளே செல்வார்கள்'' என்றார்.

# இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள அறிவியல் நகரிலுள்ள ஊடகக் கல்லூரி வளாகத்தை உடனடியாக விடுவிக்குக!

## வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்து

(பு.கஜிந்தன்)

இராணுவத்தினரது ஆக்கிரமிப்பிலுள்ள, மாமனிதர் தராக்கி சிவராமினால் கிளிநொச்சி அறிவியல் நகரில் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ஊடகக் கல்லூரி வளாகத்தை உடனடியாக விடுவித்து அதனை யாழ். பல்கலைக் கழகத்தின் கீழ் தனி அலகாகக் கொண்டுவந்து ஊடகக் கற்கை பீடமாக தொடர்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் தமிழ் ஊடகத்துறையினர் சார்பில் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தினராகிய நாம் வினயமாக கேட்டுக் கொள்கின்றோம் என வடமராட்சி ஊடக இல்லம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற சகல ஊடகவியலாளர் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படுவதன் மூலம் நீதியை நிலைநாட்ட புதிய அரசாங்கம் முன்வர வேண்டும் என யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தி நிற்கின்றது.

இலங்கையின் மிக முக்கிய ஊடகவியலாளர்களில் ஒருவராக சர்வதேச அளவில் புகழ்பெற்று விளங்கிய மாமனிதர் தராக்கி சிவராம், படுகொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை உரிய விசாரணைகள் எவையுமின்றி ஆட்சிகள் மாறினாலும் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமலும், அதற்கான நீதி பொறிமுறை உருவாக்கப்படாமலும் திட்டமிட்டு தவிர்க்கப்பட்டு வருகின்றமை இலங்கையின் உள்ளக பொறிமுறைக்குட்பட்டதான பாதுகாப்பு மற்றும் நீதித்துறை மீதான ஐயப்பாட்டினை வலுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் துப்பாக்கி முனையில் இடம்பெற்ற படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், கைதுகள் உள்ளிட்ட செயற்பாடுகள் மூலம் தமிழ் ஊடகத்துறையை அச்சுறுத்தி அடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வந்த முனைப்புகள் தற்போதும் புதிய புதிய வடிவங்களில் தொடர்ந்தே வருகின்றன. தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்து வரும் ஊடகத்துறையை நசுக்குவதன் ஊடாக தமிழர்களின் குரலை மௌனிக்கச் செய்யும் நோக்கிலேயே இவை தொடர்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளின் பின்னணியில் இலங்கை அரச படைகள் மற்றும் அவர்களோடு சேர்ந்து இயங்கிய துணை ஆயுதக்குழுவினருமே இருந்துள்ளனர்: இருந்து வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அவ்வாறிருந்தும் நிமலராஜன் முதல் சிவராம் உட்பட பல ஊடகவியலாளர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டமையுடன் தொடர்புடைய குற்றவாளிகளான மேற்குறித்த எவரொருவரும் நீதி பொறிமுறை ஊடாக கண்டுபிடிக்கப்படாத நிலையே தற்போதுவரை தொடர்கின்றது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் ஊடகத்துறை மீதான இவ்வாறான அச்சுறுத்தல் நிலையானது இலங்கையில் நிலவும் ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றின் மீதான கொடூரமான அடக்குமுறையின் வெளிப்பாடாகும்.

கொலைக் கலாசாரத்தின் பின்னணியில் ஊடகத்துறை மீதான இவ்வாறான தலையீடுகள் தொடர்வதனை உடனடியாக தடுத்து நிறுத்துவதுடன் இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் இதுவரைகாலமும் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை மூலம் நீதியை நிலைநாட்ட புதிய அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டும் என படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் தராக்கி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவு நாளில் யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தி நிற்கின்றது.

இதேவேளை, தற்போது இராணுவத்தினரது ஆக்கிரமிப்பில் உள்ள, மாமனிதர் தராக்கி சிவராமினால் கிளிநொச்சி அறிவியல் நகரில் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ஊடகக் கல்லூரி வளாகத்தை உடனடியாக விடுவித்து அதனை யாழ். பல்கலைக் கழகத்தின் கீழ் தனி அலகாகக் கொண்டுவந்து ஊடக கற்கை பீடமாக தொடர்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் தமிழ் ஊடகத்துறையினர் சார்பில் நாம் வினயமாக கேடடுக் கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தராக்கி சிவராம் - ரஜிவர்மனின் நினைவேந்தல் வடமராட்சி ஊடக இல்லத்தில் அனுஷ்டிப்பு!




(பு.கஜிந்தன்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தராக்கி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி ஊடக இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஊடகவியலாளர்களான தராக்கி சிவராமின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் செல்வராசா ரஜிவர்மனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று (28) அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் தராக்கி சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு - பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து இனம் தெரியாதவர்களால் வெள்ளை வேனில் கடத்தப்பட்ட பின்னர் சுட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில், இலங்கை பாராளுமன்றத்துக்கு அருகில் அவரது சடலம் மீட்கப்பட்டிருந்தது.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்தவேளை கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி காலை 10.30 மணியளவில் யாழ். ஸ்டான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்ல செயலாளர் இரா.மயூதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட தராக்கி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு வடமராட்சி ஊடக இல்லத் தலைவர் கு.மகாலிங்கம் மாலை அணிவித்தார். தொடர்ந்து ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் தராக்கி சிவராம் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்த தமிழ் ஊடக கல்லூரி இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. அக் காணியை விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு பக்க பலமாக தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றில் குரல் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பெனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம், சிம்பிள் புக்ஸ் டெக்னோலொஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் (வணிகப் பதிவு இலக்கம்: PV00250063) நிறுவனத்தின் குறிப்பிட்ட மூலதனத்தை இலங்கை ரூபா ஒரு இலட்சத்து பதினான்கு ஆயிரம் ரூபாயிலிருந்து (ரூ. 114,000/-) இலங்கை ரூபா ஒரு இலட்சம் ரூபாயாகக் (ரூ. 100,000/-) குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமை இதனால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (28.04.2025)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 186.4057 | 196.2117 |
| கனேடியன் டொலர் | 211.3887 | 220.3268 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.6609 | 42.2289 |
| யூரோ | 333.4415 | 346.8239 |
| ஜப்பான் யென் | 2.0465 | 2.1267 |
| சிங்கப்பூர் டொலர் | 222.7905 | 232.7254 |
| ஸ்ரேலிங் பவுன் | 391.0312 | 405.5275 |
| சுவிஸ் பிரான்ங் | 353.5483 | 370.0270 |
| ஐ.அ. டொலர் | 295.3978 | 304.0396 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 795.0994 |
| குவைட் | குவைட் தினார் | 977.1022 |
| ஓமான் | ஓமான் றியால் | 778.3827 |
| கட்டார் | கட்டார் றியால் | 82.2259 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.8904 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.5923 |

# வவுனியா தோணிக்கல் இரட்டைக் கொலை; சந்தேக நபர்களுக்கு நிபந்தனையுடன் பிணை

(சி.திவியா)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 05 சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கி வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹாஸ் உத்தரவிட்டார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன், மனைவி ஆகிய இருவர் உயிரிழந்திருந்தனர்.

குறித்த இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தின் அடிப்படையில் ஆறு பேர் வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றில் கடந்த மார்ச் மாதம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனுவை சமர்ப்பித்திருந்தார்.

அதற்கு ஆட்சேபனை வெளியிட்ட சட்ட மா அதிபர் திணைக்களத்தினர் பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடிக்குமாறு வாதங்களை முன்வைத்திருந்தனர். இருப்பினும் சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால் கைதுசெய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்க காரணம் போதாமையால் குறித்த சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கலாம் என நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைவாக நேற்று (28) குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய முதலாம், மூன்றாம், நான்காம், ஆறாம், ஒன்பதாம் இலக்க சந்தேக நபர்கள் 05 பேருக்கும் நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட்டது. ஒவ்வொருவரும் 50 ஆயிரம் ரூபா காசு பிணை மற்றும் 05 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணை அதிலும் ஒரு பிணையாளி மனுதாரராக இருக்க வேண்டும் என்பதுடன், இரு பிணையாளிகளும் கிராம அலுவலர் மூலம் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் எல்லா சந்தேக நபர்களும் மாதாந்தம் கடைசி ஞாயிற்றுக் கிழமை காலை 09 மணி தொடக்கம் மதியம் 12 மணிக்கு இடையில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் தமது வரவை பதிவு செய்ய வேண்டும் எனவும் சந்தேக நபர்களுக்கு நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு அறிவிக்குமாறும் வவுனியா நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு அறிவிக்கும்படியும் மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

# நயினாதீவு இறங்குதுறையில் மணல் ஏற்றி இறக்கும் தொழிலாளர்களுக்கு நீதி கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்



(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம், நயினாதீவைச் சேர்ந்த பொதுமக்கள் நேற்று (28) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். நயினாதீவு இறங்குதுறையில் மணல் ஏற்றி இறக்கும் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நீதி வேண்டியே இவ்வாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

மணல் ஏற்றி இறக்கும் இறங்குதுறையில் தொழிலாளிகளுக்கும் தொழில் வழங்குனருக்கும் இடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறியிருந்தது. இதனைத் தொடர்ந்து இருதரப்பினருக்குமிடையில் தொடர்ந்தும் முறுகல் நிலை ஏற்பட்டிருந்த நிலையில், தொழிலாளி ஒருவர் காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் தொழிலாளிகளின் உறவினர்கள் அவருடன் முரண்பாட்டில் ஈடுபட்டு இருந்தவர்களில் இருவரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். பொலிஸ் நிலையத்தில் இருதரப்பினராலும் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் காணாமல்போன மற்றும் ஒரு தரப்பினரின் கட்டுப்பாட்டில் இருந்த இருவரும் சம்பந்தப்பட்டவர்களால் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது தொழிலாளிகள் தரப்பைச் சேர்ந்த எட்டு பேரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸார் பக்கச்சார்பாக நடப்பதாகவும் இதற்கு நீதி கோரியும் ஊர்காவற்றுறை இறங்குதுறையில் இக்கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

# அநுராதபுரத்தில் இலவச பல்துறை மருத்துவ முகாம்

அநுராதபுரத்தில் உள்ள அபிமன்சல 1 வளாகத்தில் மே மாதம் 09ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை பல்துறை மருத்துவ முகாம் ஒன்று இடம்பெறவுள்ளதாக அநுராதபுர மாவட்ட ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அநுதாபுரம், பொலன்னறுவை மற்றும் வவுனியா மாவட்டங்களில் வசிக்கும் ஓய்வுபெற்ற/ யுத்தத்தின்போது உயிரிழந்த போர் வீரர்களின் நெருங்கிய உறவினர்கள், ஊனமுற்ற போர் வீரர்கள் மற்றும் ஓய்வுபெற்ற போர் வீரர்களுக்காக இந்த மருத்துவ முகாம் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

இந்த மருத்துவ முகாமின்போது, போர் வீரர்களுக்கு சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள், செயற்கை கால்கள் மற்றும் காலுறை ஜோடிகளும் வழங்கப்படவுள்ளன. இது தொடர்பான மேலதிக தகவல்களை, 077-4837056, 077-4835056 மற்றும் 071-5362120 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

# பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான விசேடதேவையுடைய மாணவன்

## நேரில் சென்று வாழ்த்தினார் ரவிகரன் எம்.பி.



(விஜயரத்தினம் சரவணன்)

செவிப்புலன் மற்றும் பேச்சுத்திறனற்ற மாணவன் ஒருவர் இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி சாதித்துக் காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள இனியவாழ்வு இல்லத்தில் கல்விகற்ற ஜெயபாலன் பூந்தமிழ் என்ற மாணவனே இவ்வாறு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

இந்நிலையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று (28) இனியவாழ்வு இல்லத்துக்கு நேரடியாகச் சென்று குறித்த மாணவனை வாழ்த்தியுள்ளார்.

அந்தவகையில் உயர்தரப்பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றிய ஜெயபாலன் பூந்தமிழ் சித்திரப் பாடத்தில் C தரத்திலும், புவியியல் S தரத்திலும், மனைப் பொருளியல் பாடத்தில் S தரத்திலும் சித்திபெற்றதுடன், பொது அறிவு பரீட்சையில் 38 புள்ளிகளையும் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடு எவரிடம் இருந்தாலும் எம் ஊர் எம்மோடு இருக்கட்டும்

## தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன்

(சாவகச்சேரி நிருபர்)

''உள்ளூர் அதிகாரசபைகளைக்கூட எம்முடைய கைகளில் வைத்திருக்காவிட்டால் தமிழ் மக்களுடைய நீண்ட அரசியல் நிலைமை மாறிவிட்டதாகச் சொல்லப்படும். ஆனால் அதில் ஒருபோதும் மாற்றம் கிடையாது. நாடு எவருடனும் இருக்கட்டும். ஆனால் எம் ஊர் எம் வீட்டோடு இருக்கட்டும்'' என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''கடந்த இரண்டு தேர்தல்கள் ஊடாக இந்த நாட்டில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்பது உண்மை. என்றுமே இல்லாதவாறு இடதுசாரியினர் என்று கூறும் கட்சியினர் நாட்டின் ஆட்சியைப் பிடித்துள்ளனர்.

கடந்த பாராளுமன்றத்தில் 03 பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் இந்தப் பாராளு மன்றத்தில் 159 உறுப்பினர்களாக அதிகரித்துள்ளனர். தமிழர் பிரதேசங்களிலும் ஓரளவுக்கு மக்கள் அவர்களுக்கு வாக்களித்துள்ளனர்.



ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க வடக்கு-கிழக்கில் உள்ள சகல தேர்தல் மாவட்டங்களிலும் தோல்வியடைந்திருந்தார். இலங்கை தமிழரசுக் கட்சி யாருக்கு ஆதரவளித்திருந்ததோ அவரே வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் வெற்றிபெற்றார்.

அநுரகுமார திசாநாயக்க 42 சதவீதத்துடன் ஜனாதிபதியாக வந்தவுடனே அவருக்கே பாராளுமன்ற பெரும்பான்மையைக் கொடுப்போம் என்று நாட்டு மக்கள் தீர்மானித்து அதனையும் அவரிடமே கொடுத்துள்ளனர்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 25 சதவீதமான வாக்குகள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் அவர்களுக்கு கிடைத்துள்ளது. அதன் விளைவாக அவர்களுக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கிடைத்துள்ளனர்.

அதனால் அவர்கள் தமிழ் மக்கள் தமக்கே ஆணை தந்திருப்பதாகவும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்னவென்பதனை தாமே தீர்மானிக்க வேண்டும் எனவும் கூறி வருகின்றனர்.

இது மிகவும் ஆபத்தான ஒரு விடயம். இலங்கை வாழ் தமிழ் மக்களாகிய நாம் 1950ஆம் ஆண்டுகளில் இருந்து எங்களுடைய அரசியல் நிலைப்பாடு என்னவென்பதனை தெள்ளத்தெளிவாக சொல்லி வந்திருக்கிறோம்.

சமஷ்டிக்கு குறைவான எந்தவொரு தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டதில்லை. தற்போது கூட இலங்கை தமிழரசுக்கட்சி தான் பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி. வடக்கு-கிழக்கில் உள்ள சகல தேர்தல் மாவட்டங்களிலும் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். வடக்கு-கிழக்கில் உள்ள சகல தேர்தல் மாவட்டங்களிலும் இலங்கை தமிழரசுக்கட்சி தமிழ் மக்களுடைய ஆதரவைச் சுமந்து நிற்கின்றது.

வருகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஊடாக இலங்கைத் தமிழ் மக்களுடைய சமஷ்டித் தீர்வு என்ற அரசியல் நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் இல்லை என்ற செய்தியை அடித்துச் சொல்ல வேண்டும். நாடு எவருடனும் இருக்கட்டும். ஆனால் எம் ஊர் எம் வீட்டோடு இருக்கட்டும். அதில் மாற்றம் இல்லை'' என்றார்.

# மிளகு தோட்டத்தில் கஞ்சா வளர்த்தவர் கைது

(ராமு தனராஜா)

மிளகு தோட்டத்தில் கஞ்சா பயிரிட்ட சந்தேகநபரொருவர் நேற்று முன்தினம் (27) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டமாறுவ இடிகம்பளை பகுதியில் மிளகு பயிரிடப்பட்டிருந்த கொடிகளுக்கு இடையே கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதாக மடுல்சீமை பொலிஸ் நிலைய புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்குறிப்பிட்ட பகுதிக்கு விரைந்து சுற்றிவளைப்பினை மேற்கொண்டபோது சூட்சுமமான முறையில் மிளகு கொடிகளுக்கு இடையே வளர்க்கப்பட்டிருந்த 05, 06 அடி உயரம் கொண்ட 19 கஞ்சா செடிகளை மீட்டுள்ளதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

40 வயதுடைய இடிகம்பளை பிட்டமாறுவ பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

# ஊடகர்களால் யாழ்ப்பாணத்தில் நினைவுகூரப்பட்ட தராக்கி சிவராமின் 20ஆம் ஆண்டு நினைவு தினம்!




(பு.கஜிந்தன்)

மூத்த ஊடகவியலாளர் தராக்கியின் 20ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று (28) இலங்கையின் ஊடகப் பரப்பில் இருக்கும் சக ஊடகவியலாளர்களால் யாழ்ப்பாணத்தில் நினைவு கூரப்பட்டது.

யாழ்ப்பாணம் ஊடக அமையம், கிழக்கிலங்கை ஊடகவியலாளர்கள் ஒன்றியம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள ஊடகவியலாளர்களுக்கான நினைவுத் தூபியில் தராக்கி சிவராமின் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர் தராக்கி சிவராம் மற்றும், ஊடகவியலாளர் செல்வராஜா ரஜிவர்மன் ஆகியோரின் உருவப்படத்துக்கு சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தி நினைவு கூரப்பட்டது.

மேலும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவிய லாளர்களுக்கு நீதி கோரி ஊடகவியலாளர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமும் மேற்கொள் ளப்பட்டது.

குறிப்பக 41 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும் காணாமலாக்கப்பட்டும் இருக்கும் நிலையில் இன்றுவரை அவர்களுக்கான நீதி எந்தவொரு அரசுகளாலும் வழங்கப்படாதிருக்கின்ற நிலையில், நீதியை வழங்குமாறு இந்த நினைவு நாளில் வலியுறுத்தப்பட்டது.




இதன்போது ஊடகவியாளர்கள், சிவில் அமைப்புகளின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த நினைவேந்தலின்போது பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் கடும் அச்சுறுத்தல் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈ.பி.டி.பி. கட்சியினர் திக்கம் வடிசாலை விவகாரத்தில் எலி பிடிக்காத பூனை போல் நாடகம் போடுகின்றனர்

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன்

(சாவகச்சேரி நிருபர்)

''திக்கம் வடிசாலை விவகாரத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் உருத்திராட்சப் பூனை போல் (எலி பிடிக்காத பூனையாக) நாடகம் போடுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது'' என பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

திக்கம் வடிசாலை விவகாரம் தொடர்பாக ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் ஊடகங்களுக்கு வழங்கிய கருத்துகளுக்கு மறுப்புத் தெரிவித்தபோதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;



''திக்கம் வடிசாலை விவகாரத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் அநீதியுடன் தொடர்புடையவர்கள். அவர்கள் தற்போது நன்மைகள் நடக்கும்போது அமைதியாக இருக்க வேண்டும். அல்லது தாம் செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தம் தேட ஏதாவது நன்மைகளைச் செய்ய முன்வர வேண்டும். ஆனால் இவர்கள் அவற்றைத் தவிர்த்து திக்கம் வடிசாலை விவகாரத்தில் எரிகின்ற வீட்டில் பிடுங்கியது அறுதி என்ற நிலையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஈ.பி.டி.பி. கட்சியினர் மக்களின் சொத்து மக்களுக்கே கிடைக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர்களாக இருந்திருந்தால் 2000ஆம் ஆண்டிலிருந்து நீறு பூத்த நெருப்பாக இருக்கும் இவ் விடயம் தொடர்பில் பராமுகமாக இருந்திருப்பார்களா? கடந்த காலத்தில் திக்கம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அத்தனை முறைகேடுகளும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும்.

தற்போது நாம் நன்மைகள் செய்ய விளையும் போது தாம் உருத்திராட்சப் பூனைகள் போன்று நாடகம் போடுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அண்மையில் என்னால் கைதடியில் இருந்து திக்கம் வரை மேற்கொள்ளப்பட்ட நடைபயணம் அரசியல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதில்லை. பனை அபிவிருத்திச்சபையின் பணிப்பாளர் சபை எடுத்த பனை தென்னை வள சங்கங்களுக்குச் சாதகமான தீர்மானங்களை நான் நடைபயணமாக கொண்டு சென்று வழங்க வேண்டிய அவசியமும் இல்லை.

இருப்பினும் பனம் தொழிற்றுறையின் பெருமையையும் திக்கம் வடிசாலை விவகாரத்தையும் மக்கள் அறிய வேண்டும் என்ற விழிப்புணர்வுக்காகவே 32கிலோமீற்றர் நடைபயணம் செய்து தீர்மானத்தை தெரியப்படுத்தினேன்.

அத்தோடு எமது பணிப்பாளர்சபை உறுப்பினர்கள் கடந்த காலத்தைப் போன்று எடுபிடிகள் அல்ல. அவர்களுடைய ஆலோசனைகள் பெறுமதிமிக்கவை. அவர்கள் தீர ஆராய்ந்தே திக்கம் வடிசாலையை மீளவும் சங்கங்களுக்கு வழங்குவது என்ற தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

திக்கம் வடிசாலை தொடர்பாக தற்போது கருத்துச் சொல்பவர்கள் 25வருடங்களாக மக்களுக்குச் செய்த உபத்திரவம் போதும். மக்கள் அவர்களை ஒதுங்கி இருக்கச்சொல்லிவிட்டனர். திக்கம் வடிசாலை விடயத்தை மீண்டும் அரசியலாக்க வேண்டாம். கடந்த காலங்களில் எனக்கு வந்த அச்சுறுத்தல்களுக்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. எதிர்காலத்திலும் அச்சுறுத்தல்கள் வரலாம். அதனைக் கண்டு அஞ்சப்போவதில்லை.


திக்கம் வடிசாலை நாட்டினுடைய வளம். நடக்கும் நன்மைகளுக்கு எவரும் தடையாக இருக்கக்கூடாது. புதிய அரசாங்கத்தின் ஊழல் அற்ற கொள்கையின் வெளிப்பாடாகவே திக்கம் வடிசாலையை மீளவும் சங்கங்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை ஈ.பி.டி.பியினர் உணர்ந்து ஒதுங்கி இருக்க வேண்டும். மக்கள் ஏற்கனவே உங்களை ஒதுக்கி வைத்துவிட்டனர். இந்தத் தேர்தலில் அடியோடு ஒதுக்குவார்கள்'' என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரி
VIVEKANS NETBALL LEAGUE

நூற்றாண்டு விழாவை நோக்கிய பயணத்தில்
மகளிர் தினத்தை முன்னிட்டு

பழைய மாணவிகளுக்கிடையிலான
மாபெரும் வலைப்பந்தாட்ட போட்டிகள்



பங்கேற்கும் அணிகள்
- காளஸ்திகா
- ருத்ரா
- ஆர்யா
- வேலு நாச்சியார் படை
- நீலாம்பரி

இடம்
கொழும்பு விவேகானந்தா கல்லூரி மைதானம்

திகதி
04.05.2025

நேரம்
8.00 மணி முதல்

மாபெரும் இறுதிப் போட்டி அடங்கலாக மொத்தம் 13 போட்டிகள்

ஊடக அனுசரணை
அச்சு ஊடகம்
தமிழன் தமிழன் ஜூனியர்
இலத்திரனியல் ஊடகம்
தமிழ் 99.5 99.7

# சம்பூர் சூரிய மின்சக்தி திட்டத்துக்காக இந்தியாவுடன் மேற்கொண்ட ஒப்பந்தம் அரசுக்குக் கிடைத்த வெற்றி

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா





**(சீனக்குடா செய்தியாளர்)**

சம்பூர் பிரதேசத்தில் அனல் மின் உற்பத்திக்குப் பதிலாக தற்போது சூரிய மின் உற்பத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு இந்திய அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அரசாங்கத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்'' - என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான மக்கள் சந்திப்பொன்று ஞாயிற்றுக்கிழமை (27) காலை சம்பூர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதில் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஏற்கனவே சம்பூரில் மும்மொழியப்பட்ட அனல் மின்சார நிலையம் தற்போது கைவிடப்பட்டு, சூரிய மின்சக்தி நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர், சம்பூர் அனல் மின் நிலையத்துக்கு எதிராக நாங்கள் போராட்டம் நடத்தினோம். பொதுவாக ஓர் அரசுக்கும் இன்னொரு அரசுக்கும் இடம்பெற்ற ஒப்பந்தங்களை எடுத்த எடுப்பிலே கைவிட்டு விட முடியாது. இந்நிலையில், நாங்கள் அதியுச்சமான மாற்றங்களைச் செய்து, மக்களுக்கோ சுற்றுப்புறச் சூழலுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில், இங்கு சூரிய சக்தி மின்சாரத்துக்காக ஒப்பந்தங்களை செய்திருக்கிறோம்.

இது எங்களுக்குக் கிடைத்த ஒரு பாரிய வெற்றியாகும். இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்குமிடையில், சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பாக, கடந்த காலங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்த பல விடயங்கள் இருந்தாலும், அவற்றுக்கு மாற்றீடாக பல விடயங்களை முன்வைத்து இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. ஏனைய பிரதேசங்களை விட, சம்பூர் பிரதேசம் யுத்தத்தாலும் யுத்தத்துக்குப் பின்னரும் கடுமையாக பாதிக்கப்பட்ட ஒரு கிராமமாகும். இந்தப் பிரதேச மக்களை மீள்குடியேற்ற வேண்டுமென்ற நோக்கோடு கடந்த கால ஆட்சியாளர்கள் செயற்படவில்லை.

ஒருபுறம் கடற்படை முகாம், மறுபுறம் கைத்தொழில்பேட்டை, இன்னும் ஒரு பக்கம் அனல் மின் நிலையம் என இந்தப் பிரதேசத்தை கடந்த ஆட்சியாளர்கள் மூன்றாகப் பிரித்திருந்தனர். இந்த நிலைமையை நாங்கள் மாற்றியமைத்து, மக்கள் மீள்குடியேறி நிம்மதியாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றோம். இன்னும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இந்தப் பிரதேசத்தில் இருக்கின்றன. அவை அனைத்தையும் படிப்படியாக நாங்கள் நிவர்த்தி செய்வோமென்பதை இங்கு உறுதியாகக் கூறுகின்றேன்'' - என்றார்.

# வர்த்தகப் பிரிவில் சிவர்ஷிக்கா மாவட்ட மட்டத்தில் முதல் நிலை

**(ஆலையடிவேம்பு செய்தியாளர்)**

ஆலையடிவேம்பு கல்வி கோட்டத்தில் வர்த்தகப் பிரிவில் மாணவி கே.சிவர்ஷிக்கா மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ளதுடன், பி.துஸ்மிதன் வைத்தியத்துறைக்கும் சி.லக்சிதன் பொறியியல்துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான க.கமலமோகனதாசன் தெவித்தார்.

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலய மாணவி வர்த்தகத்துறையில் மாவட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ளதுடன், அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலையிலிருந்து இருவர் வைத்தியத்துறைக்கும் பொறியியல்துறைக்கும் தெரிவாகியுள்ளனர்.

இதேநேரம் கோட்டத்திலுள்ள 05 பாடசாலைகளிலிருந்து 105 மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார். உயிரியல் பிரிவிலிருந்து ஒரு வைத்தியத்துறை உள்ளடங்கலாக 19 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கணிதப்பிரிவில் ஒரு பொறியியல் உட்பட 16 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். வர்த்தகப் பிரிவில் 19 மாணவர்களும் கலைத்துறையில் 44 மாணவர்களும் தெரிவாகியுள்ளனர்.

அதேவேளை, தொழில்நுட்பவியல் பிரிவிலிருந்து 07 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலையிலிருந்து 10 மாணவர்களும் இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலயத்திலிருந்து 04 மாணவர்களும் கோளாவில் விநாயகர் மகாவித்தியாலயத்திலிருந்து 02 மாணவர்களும் என 16 மாணவர்கள் கோட்டத்தில் 3 ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

குறித்த வெற்றிக்காக உழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர் உள்ளிட்ட அனைவருக்கும் திருக்கோவில் வலயக்கல்வி அலுவலகம் சார்பாக வாழ்த்துகள். குறிப்பாக, அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா கல்லூரி அதிக மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பும் பாடசாலையாக தொடர்ந்தும் மிளிர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொறியியல், மருத்துவத்துறைக்கு மண்முனை தென்மேற்கு கோட்டத்திலிருந்து 06 பேர் தெரிவு

**(கொக்கட்டிச்சோலை)**

2024ஆம் ஆண்டுக்காக க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட மண்முனை தென்மேற்கு கோட்டப் பாடசாலைகளில் 06 மாணவர்கள் பொறியியல், மருத்துவபீடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பைப் பெற்று சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

குறித்த கோட்டத்துக்குட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் இராசரத்தினம் தமிழ்ரூபிகா என்ற மாணவி பொறியியல் பீடத்துக்கும் அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் நே.தசாகரன் என்ற மாணவன் பொறியியல் பீடத்துக்கும் முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற கி.கிசோமிகா, த.ஜக்சாயினி, தி.நிலுஜன் ஆகிய மாணவர்கள் பொறியியல் பீடத்துக்கும் தெ.ருஜன் என்ற மாணவன் மருத்துவ பீடத்துக்கும் செல்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் முழுமையாக கஷ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளை உள்ளடக்கியதாகும். மேலும் அம்பிளாந்துறை பாடசாலையில் முதன்முறையாக பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகியுள்ளமை பாடசாலையின் வரலாற்றுச் சாதனையுமாகும்.

கலைப்பிரிவில் குறித்த கோட்டத்துக்குட்பட்ட 07 மாணவர்கள் 3'ஏ' சித்திகளையும் வர்த்தகப் பிரிவில் இரண்டு மாணவர்கள் 2'ஏ' சித்திகளையும் பெற்றுள்ளனர்.

அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் அற்புதநாதன் அபிநயா என்ற மாணவி மாவட்டத்தில் இரண்டாம் நிலையை கலைப்பிரிவில் பெற்றுள்ளார். மேலும், குறித்த பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் கலைத்துறையில் 3'ஏ' சித்தியைப் பெற்றுள்ளனர்.

இதேபோன்று மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலய மாணவர்கள் இருவரும் முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலய மாணவர் ஒருவரும் முதலைக்குடா மகா வித்தியாலய மாணவர் ஒருவரும் 3'ஏ' சித்தியைப் பெற்றுள்ளமை எடுத்துக்காட்டத்தக்கது.

இதேபோன்று அரசடித்தீவு மகா வித்தியாலயத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி பயின்ற இரு மாணவர்கள் வர்த்தகப் பிரிவில் 3'ஏ' சித்தியையும் பெற்றுள்ளனர்.

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வும் பாரம்பரிய விளையாட்டு ஊஞ்சல் விழாவும்







**(மட்டக்களப்பு)**

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது மகிழூர் பிரதேச சமூக அமைப்புகள் மற்றும் அறநெறிப்பாடசாலைகளுடன் இணைந்து நடத்திய சமய குரவர்களுள் தலையாயவரான திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வும் பாரம்பரிய விளையாட்டு மற்றும் ஊஞ்சல் விழாவானது பிரதேச செயலாளர் உதயஸ்ரீதர் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (27) மகிழூர்முனை ஸ்ரீ விஷ்ணு ஆலய முன்றலில் இடம்பெற்றது.

மகிழூர்முனை சக்தி வித்தியாலயத்துக்கு அருகாமையிலிருந்து ஆரம்பமான ஊர்வலத்தில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் திருநாவுக்கரசு நாயனாரின் வேடம் தரித்து, நாயனாரின் திருவுருவப்படத்தை ஏந்தியவாறு ஆலயமுன்றலை அடைந்ததுடன், பூசை வழிபாடுகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

திருநாவுக்கரசு நாயனாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் அற்புதங்கள் தொடர்பாக அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிதிகளால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஆலய முன்றிலில் பாரம்பரிய விளையாட்டு மற்றும் ஊஞ்சல் விழா மாணவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மகிழூர் பிரதேச ஆலயங்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். இந்த நிகழ்வைப் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து ஒருங்கிணைப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மெதடிஸ்த மத்திய கல்லூரியில் பொறியியல்துறைக்கு 14 பேர் தெரிவு

**(வெல்லாவெளி செய்தியாளர்)**

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் பொறியியல்துறைக்கு 14பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் இராசதுரை பாஸ்கர் தெரிவித்தார்.

தற்போது வெளியாகியுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் பொறியியல்துறைக்கு (3ஏ- 8 பேரும், 2ஏபி-6 பேரும், மாவட்ட நிலை-2 அடங்கவாக) 14 பேரும் மருத்துவத்துறைக்கு (3ஏ-2) இரண்டுபேரும் உயிர்முறைமைத் தொழில்நுட்பத்துறைக்கு (ஏபிசி, 2பிசி மற்றும் மாவட்டநிலை-2 அடங்கலாக) இரண்டு பேரும் பொறியியல் தொழில்நுட்பத் துறைக்கு ஒருவரும் வர்த்தகத்துறைக்கு 4பேரும் கலைத் துறைக்கு இரண்டுபேரும் பௌதீகவியல் துறைக்கு 17 பேரும் உயிரியல்துறைக்கு 9பேர் உட்பட 51 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு பல்கலைக் கழகம் செல்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள் உட்பட பெற்றோருக்குப் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துக்கொள்கின்றனர்.



மட்டக்களப்பு, ஏறாவூர் நகரசபைக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்கென தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதான அலுவலகம் சம்பிரதாயபூர்வமாகத் திறக்கப்பட்டது. கட்சியின் ஏறாவூர் அமைப்பாளரும் முதன்மை வேட்பாளருமான சி.எம்.எம்.நிசாத் தலைமையில் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் அலுவலகத்தைத் திறந்துவைத்தார். (ஏறாவூர் செய்தியாளர்)



இறக்காமம் பிரதேசத்திலிருந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இறக்காமம் அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இறக்காமம் சமூக நலன்புரி அமைப்பால் நடத்தப்பட்ட நிகழ்வில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்குத் தொடர்பாடல் மற்றும் ஊடக பாடத்தைக் கற்பித்தமைக்காக அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் வளவாளர் எம்.எஸ்.எம்.பிஷ்ரின், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.சியாத்தால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

(அக்கரைப்பற்று செய்தியாளர்)



2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் மட்டக்களப்பு அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தில் கலைப்பிரிவில் கல்வி பயின்ற அற்புதநாதன் அபிநயா, மாவட்ட நிலையில் இரண்டாம் இடத்தையும் மற்றும் கிருபைரெத்தினம் தீபகாந்தி மாவட்ட நிலையில் 13ஆம் இடத்தையும் பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (கல்லடி செய்தியாளர்)



2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின்படி மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலய மாணவி முஹம்மட் அன்வர் பாத்திமா அன்பால் மருத்துவ பீடத்துக்குத் தெரிவுசெய்யப் பட்டுள்ளார். குறித்த மாணவி பரீட்சையில் 2ஏ, பி பெறுபேறுகளைப் பெற்று மருத்துவ பீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவரை பாடசாலை அதிபர் ஏ.ஜே.மர்சூக் மற்றும் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர் வாழ்த்தி பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

(மீராவோடை செய்தியாளர்)

# ஊடகர் சிவராமின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று




**(பழுகாமம் செய்தியாளர்)**

சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராக்கி சிவராமின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வானது இன்று 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.





நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் போட்டியும் வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற நிகழ்வுகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டார். சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கவேண்டியதன் முக்கியத்துவத்தையும் மக்களுக்குத் தெளிவுபடுத்தினார். இவ்விஜயத்தின்போது, குருநாகல் மாவட்ட மக்களால் பாராளுமன்ற உறுப்பினருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தமிழரசுக் கட்சிக்கு எமது மக்கள் நல்ல பாடத்தை கற்பிக்க வேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.



(மட்டக்களப்பு, குருக்கள்மடம் செய்தியாளர்கள்)

''உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலம் எமது மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும். எமது கட்சிக்குள் இருக்கின்ற உறுப்பினர்களைப் பலப்படுத்த வேண்டும். அவர்களின் அந்தத் தலைமைத்துவம் இருக்கின்ற வரைக்கும் தமிழ் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும்'' - என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போரதீவுப்பற்று வேட்பாளர் அறிமுக நிகழ்வு மண்டூர் தம்பலவத்தை கிராமத்தில் அண்மையில் (23) நடைபெற்றது. இதன்போது கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

''நாங்கள் தமிழரசுக் கட்சியை முற்று முழுதாக அழிக்க வேண்டும். அரசியல் அரங்கிலிருந்து அவர்களை நீக்க வேண்டுமென்ற அடிப்படையில் இயங்குகின்ற ஓர் அமைப்பு அல்ல. எம்மைப் பொறுத்தவரை நாங்கள் தமிழரசுக் கட்சிக்கெதிராக செயற்பட வேண்டியிருக்கின்றதாக இருந்தால் அதற்கு காரணம் தமிழரசுக் கட்சியை தற்போது தலைமை வகிக்கின்றவர்கள் முற்று முழுதாக எந்தக் கொள்கைக்காகத் தந்தை செல்வநாயகத்தின் காலத்திலே அக்கட்சி ஸ்தாபிக்கப்பட்டதோ அந்தக் கொள்கைக்கு நேர் மாறாக அந்தக் கட்சியை வழி நடத்திக்கொண்டு செல்வதுதான் காரணமாகும்.

தமிழ்த் தேசியத்திலே இயங்கக்கூடிய கட்சிகளுக்கு கடந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் ஒரு சவாலை ஏற்படுத்தியிருக்கின்றன. தற்போது ஆட்சியிலிருக்கின்ற தேசிய மக்கள் சக்தி, அதுபோல் ஜே.வி.பி. தமக்குத்தான் தமிழ்த் தேசிய மக்கள் ஆணை வழங்கியிருப்பதாக சர்வதேச மட்டத்திலே பெரியதொரு கருத்துருவாக்கத்தைச் செய்து வருகின்றது. கடந்த தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டம் தவிர அனைத்து மாவட்டங்களிலும் அவர்களுடைய கட்சி அதிகளவு வாக்குகளைப் பெற்றதாகக் கூறி தமிழ் மக்கள் அவர்களுக்குத்தான் ஆணை வழங்கியிருப்பதாகக் கருத்துருவாக்கத்தைச் செய்துகொண்டு வருகின்றார்கள்.

இந்நிலையில், நாங்கள் சந்திக்கின்ற வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் இந்தக் கருத்துருவாக்கத்தை என்னிடம் தெரிவித்து வருகின்றன. அதனை நாங்கள் மறுதலித்தும் வருகின்றோம். ஜே.வி.பி. கிழக்கு மாகாணத்திலேயே வாக்குகளைப் பெற்றிருக்கின்றதென்றால் அது அங்கிருக்கின்ற சிங்கள மக்களின் வாக்குகளாலேதான் பெற்றிருக்கின்றது. தமிழ் மக்களின் பெரும்பான்மையான வாக்குகளால் அல்ல. அதுபோல், வடக்கிலே யாழ். மாவட்டத்தில் மாத்திரம்தான் ஜே.வி.பிக்கு பெரியதொரு வாக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்கின்றார்கள். ஆனாலும் யாழ். மாவட்டத்திலேயே மூன்று ஆசனங்களை அவர்கள் பெற்றிருந்தாலும் வெறுமனே 24 வீதமான வாக்குகள்தான் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். மீதமான 76 வீதமான வாக்குகள் அவர்களுக்கெதிரான வாக்குகளாகத்தான் விழுந்திருக்கின்றன.

வடக்கிலே அங்கு ராமநாதன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் வாக்குகள் பிரிந்ததாலேதான் அவர்களுக்கு வாக்கு கிடைத்து இரண்டு ஆசனங்களுக்கும் மேலதிகமான ஓர் ஆசனமுமாக மூன்று ஆசனங்களும் கிடைத்திருக்கின்றன. மாறாக, மக்களுடைய ஆணை அவர்களுக்கு பெருவாரியாகக் கிடைத்ததென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

உள்ளூராட்சித் தேர்தல் நிலைப்பாடு தெளிவான தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்த வேண்டிய கட்டாய தேவை நம்மிடத்தில் இருக்கின்றது. அதில்தான் எமது முக்கியத்துவம் வருகின்றது. ஜே.வி.பி. ஒற்றையாட்சி முறையொன்றைக் கொண்டுவந்து நிறைவேற்றப் போவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பல தடவைகள் கூறியுள்ளார். அந்த ஒற்றையாட்சி அமைக்கும் முறை என்ன என்பதையும் தெளிவாகச் சொல்லியுள்ளார். 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரைக்கும் இருந்த ஆட்சிக் காலத்திலேயே ஒரு புதிய அரசியலமைப்புக்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அந்த இடைக்கால அறிக்கை அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டிய விடயமாகும்.

76 வருட காலமாக எமது இனப்பிரச்சினைக்கு மூல காரணமாக இருப்பது அந்த ஒற்றையாட்சி. பௌத்தர்களுடைய கையிலேதான் அந்த ஆட்சியை வழங்க வேண்டும். ஆகவே, அந்த ஒற்றையாட்சி முறையும் இலங்கைத் தீவில் தமிழர்களுக்குப் பொருந்தாதென எமது மூத்த தலைவர்கள் முடிவெடுத்து இந்த இலங்கைத் தீவிலே தமிழ் மக்கள் சுதந்திரமாக சம உரிமையோடு பாதுகாப்பாக தங்களுடைய மக்களையும் தக்க வைத்துக்கொண்டு வாழ்வதாக இருந்தால் ஒற்றையாட்சியை நிராகரித்து ஒரு சமஷ்டி ஆட்சி ஊடாகத்தான் நாம் அதனை உறுதி செய்யலாமென்பதே எனது அடிப்படைக் கொள்கையாக இருக்கின்றது.

ஐக்கிய ராஜ்ஜிய அரசியலமைப்பை ஸ்தாபிப்பதற்கு தமிழரசுக் கட்சியின் தற்போதைய செயலாளருக்கு மிகப்பெரிய பங்குள்ளது. சம்பந்தன் ஐயாவுக்கும் பெரிய பங்கு உள்ளது. அவர்கள் இருவரும்தான் முக்கியமாக அந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அரசியலமைப்பைத் தயார்படுத்துவதற்கு - வேலைத்திட்டத்தைத் தயார்படுத்துவதற்கு தமிழர்கள் சார்பாக அதில் இருந்து வந்தார்கள். சம்பந்தன் ஐயா தற்போது இல்லை. ஆனால், சுமந்திரன் இருக்கிறார். அது மாத்திரமன்றி, சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் செய்த துரோகத்துக்காக யாழ்ப்பாண மக்கள் அவரைத் தூக்கி எறிந்தாலும்கூட எமது இனத்தின் கஷ்ட காலத்துக்கு அவர் தமிழரசுக் கட்சியை அசைக்க முடியாத ஒருவராக வைத்திருக்கின்றார்.

தமிழ் மக்கள் அவரைத் தோற்கடித்தாலும் தமிழரசுக் கட்சி தமிழருடைய பாரம்பரிய கட்சி என்ற நினைப்பிலேயே மக்கள் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தாலே 08 ஆசனங்களைப் பெற்ற வுடனேயே அதே சுமந்திரன் தமிழரசுக்கட்சிக்கு கிடைத்த ஆணையை வைத்து தற்போது அந்த முழு கட்சியையும் தான் மீண்டும் தனது பிடிக்குள் எடுத்து ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றார்.

எனவே, இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலம் எமது மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும். எமது கட்சிக்குள் இருக்கின்ற உறுப்பினர்களைப் பலப்படுத்த வேண்டும். அவர்களின் அந்தத் தலைமைத்துவம் இருக்கின்ற வரைக்கும் தமிழ் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளப்போவதில்லையென்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அவ்வாறு நினைத்தால் அந்தத் தலைமைத்துவத்தைத் திருத்தலாம். அல்லது தூக்கியெறிந்து தமிழரசுக் கட்சி தனது ஆரம்பக் கொள்கைக்கு விசுவாசமாகப் பயணிக்கக்கூடிய ஒரு புது தலைமைத்துவத்தை ஏற்படுத்தும். அந்த நாள் வருகின்ற பொழுது இந்தத் தமிழ்த் தேசியப் பேரவை தமிழரசுக் கட்சியோடு பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக நடத்துமென்ற நம்பிக்கையை நான் இன்று தெரிவித்துக் கொள்கின்றேன். அந்த நிலைமை உருவாகின்ற வரைக்கும் தமிழரசுக் கட்சியோடு பேசுவது எந்தக் காரணத்திலும் வெற்றி கொடுக்கப் போவதில்லையென்பதையும் நான் பொறுப்போடு தெரிவிக்கின்றேன்'' - என அவர் இதன்போது தெரிவித்தார்.

# ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆட்சியை பெற்றுத்தந்தால் பெரிய பரிசு காத்திருக்கிறது

## ரவூப் ஹக்கீம் எம்.பி.



(மீராவோடை செய்தியாளர்)

''கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஓட்டமாவடி பிரதேச சபையில் எமக்கு கூடுதலான ஆசனங்கள் கிடைத்தும் ஆட்சியமைக்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. எங்களது கட்சியில் போட்டியிட்டவர் மாறிப்போனதால் ஆட்சி கை நழுவிப் போனது'' - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் (24) ஓட்டமாவடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசுகையில்,

''இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் நீங்கள் ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆட்சியைப் பெற்றுத் தந்தால் அதற்கான பெரிய பரிசு காத்திருக்கிறது. அதை நீங்கள் பெற்றுத் தரவேண்டும். அதன் மூலம் இந்தப் பிரதேசத்தை நான் கண்ணியப்படுத்தி, கௌரவப்படுத்த வேண்டும் எனும் ஆவலோடு காத்திருக்கிறேன்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நீங்கள் எல்லோரும் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸுக்கு அளித்த வாக்குகளால்தான் எங்களுக்கு மேலதிகமாக ஓர் ஆசனம் கிட்டியது. அந்த ஆசனத்தைச் சுழற்சி முறையில் பங்கிடுவதென்று நாங்கள் தீர்மானித்துள்ளோம். கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரஸின் அபிமானம், மீளக் கட்டியெழுப் பப்பட்டிருக்கிறது எனும் விவகாரத்தை நீங்கள் உரத்துச் சொல்ல வேண்டும்'' - என்றார்

கல்குடாவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினரை வழங்குவது தொடர்பாகவே பெரிய பரிசு காத்திருக்கிறது என்று ரவூப் ஹக்கீம் மக்கள் மத்தியில் கூறியமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்கள் திசைகாட்டிக்கு வாக்களிப்பது இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவதற்குச் சமம்

## இம்ரான் எம்.பி.

(கிண்ணியா செய்தியாளர்)

''முஸ்லிம் மக்கள் திசைகாட்டிக்கு வாக்களிப்பது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமாகும்'' என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் அண்மையில்(25) இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

''இந்த அரசாங்கம் இஸ்ரேலைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றது. இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற செயலைக் கண்டித்து ஸ்டிக்கர் ஒட்டிய இளைஞர் ருஸ்தியை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தமை இதற்கு நல்ல உதாரணமாகும். இஸ்ரேலியர்கள் இலங்கையில் அவர்களது சமயத்தலங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள அரசாங்கம் அதற்கு அரச பாதுகாப்பை வழங்கி வருகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இது தொடர்பில் அண்மையில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது சரியான பதில் கொடுக்க முடியாது. அரசாங்கம் மழுப்பிய விடயம் நம் அனைவருக்கும் தெரியும். பொத்துவில் அருகம்பேயில் யூதர்கள் பாலர் பாடசாலை நடத்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதோடு அதற்காக 05க்கும் மேற்பட்டோருக்கு நீண்ட நாள் விசா வழங்கி வருகின்றது. இதனால் அவர்கள் நிரந்தரமாக இங்கு தங்கியுள்ளார்கள். இவர்களது பாதுகாப்பைக் காரணம் காட்டித் தான் பொத்துவில் பகுதியில் முஸ்லிம்கள் சிலர் கைது செய்யப்பட்டமை அனைவருக்கும் நினைவில் இருக்கும்.



அருகம்பே பகுதியில் பாலர் பாடசாலை நடத்துகிறோம் என்ற போர்வையில் யூதர்கள் நிரந்தரமாக ஏன் தங்கியுள்ளார்கள் என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இங்கிருந்து முஸ்லிம்களுக்கெதிரான சதித் திட்டம் ஏதும் தீட்டப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. இலங்கையில் உள்ள சட்டத்தின்படி தனியார் எவரும் இலங்கை பாடத்திட்டத்தைப் போதிக்கின்ற தனியார் பாடசாலை நடத்த முடியாது. ஆனால் அருகம்பேயில் பாலர் பாடசாலை நடத்த யூதர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இஸ்ரேலியர்கள் என்றால் சட்ட திட்டம் பார்க்கப்படாது என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

இந்த அரசாங்கம் இஸ்ரேலியர்களைப் போசித்து பராமரிக்கும் அளவுக்கு முஸ்லிம்களுக்கு எதிராக அடக்கு முறைகளைப் பிரயோகித்து வருகின்றது என்பதை நாம் இவற்றிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது. எனவே இந்த அரசாங்கத்துக்கு வாக்களிப்பதானது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமானது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வயல் பகுதியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு, எருவில் கிராமத்தில் சனிக்கிழமை (26) மாலை வயல் பகுதியிலிருந்து ஆணொருவரின் சடலத்தை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் எருவில் கிராமத்தைச் சேர்ந்த 44 வயதுடைய இரத்தினசிங்கம் உத்தமன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சனிக்கிழமை அப்பகுதியில் அமைந்துள்ள அவரது வயலுக்குள் வேளாண்மையைப் பார்ப்பதற்காக துவிச்சக்கரவண்டியில் சென்றுள்ளார். துவிச்சக்கர வண்டியை குளக்கட்டில் வைத்துவிட்டு வயலுக்குள் இறங்கி தனது வேளாண்மைச் செய்கையைப் பார்வையிட்டுள்ளார். அப்போது அவருக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக வயலுக்குள்ளேயே உயிரிழந்திருக்கலாம் என உறவினர்கள் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்நிலையில், திடீர் மரணவிசாரணை அதிகாரி வி.ஆர்.மகேந்திரன், சடலத்தைப் பார்வையிட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவுகளின்படி மாரடைப்பு காரணமாக குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்பு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுத்தருவதாக மோசடி

## மக்களை விழிப்புடன் செயற்படுமாறு பிரதேச சபை வேண்டுகோள்

(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அஸ்வெசும கொடுப்பனவைப் பெற்றுத்தருவதாகக் கூறி நூதன திருட்டில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அவ்வாறு யாராவது உங்களைத் தொடர்பு கொண்டால் பிரதேச செயலக அஸ்வெசும நலன்புரி பிரிவுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இவ்வாறானதொரு சம்பவம் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் கோளாவில் -3 பிரதேசத்தில் நேற்று முன்தினம்(27) இடம்பெற்றுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

குறித்த பிரிவில் வாழும் அஸ்வெசும கொடுப்பனவு இதுவரை கிடைக்கப்பெறாத குடும்பமொன்றுக்கு தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்ட பெண்ணொருவர், அப் பெண்ணுக்கான அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் இதற்காக அவரது கணக்கிலக்கத்தை வழங்குமாறும் கேட்டுள்ளார்.

அத்தோடு, இரகசிய இலக்கம் வருகின்ற தொலைபேசி இலக்கத்தையும் அனுப்புமாறு கேட்டுள்ளார். பின்னராக ஆணொருவர் தொடர்பு கொண்டு குறித்த கணக்கில் ஒரு தொகைப்பணத்தை வரவில் இடுமாறும் மேலதிக அஸ்வெசும பணம் அக்கணக்கில் வரவு வைக்கப்படுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், நேற்று (28) பிரதேச செயலகத்துக்கு வருகை தந்த அஸ்வெசும கிடைக்கப்பெறாத பெண் உரிய உத்தியோகத்தரிடம் சம்பவம் தொடர்பில் தகவல் வழங்கிய நிலையில் உண்மைத்தன்மை கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, பொதுமக்களை இவ்விடயம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் அவ்வாறு யாராவது அழைத்தால் உடன் பிரதேச செயலக அஸ்வெசும பிரிவு உத்தியோகத்தரை நாடுமாறும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரதேச செயலாளர் சார்பாக உதவிப் பிரதேச செயலாளர் பொது மக்களைக் கேட்டுக்கொள்கின்றார்.

# நிதிக் கையாளுகையில் கல்முனை பிரதேச செயலகம் தவறிழைத்துள்ளமை கண்டுபிடிப்பு

## பிரதேச செயலாளருக்கு கடிதம் மூலம் சுட்டிக்காட்டு

(புளியந்தீவு செய்தியாளர்)

கல்முனை பிரதேச செயலகம் நிதிக் கையாளுகையில் தவறிழைத்திருப்பது கிழக்கு மாகாண காணி ஆணையாளரால் கண்டுபிடிக்கப்பட்டு பிரதேச செயலாளருக்கு கடிதம் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதென கல்முனை கலாசாரப் பேரவையின் தலைவர் விநாயகம்பிள்ளை தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இலங்கையின் நிதிப் பிரமாணங்களை யாரேனும் அரச உத்தியோகத்தர்கள் மீற முடியாது. அதிலும் ஒரு பிரதேச செயலாளர் பிரதேச செயலகத்துக்கு வருகின்ற நிதியை நிதிப் பிரமாணங்களுக்கேற்ப செயற்படுத்தியிருக்க வேண்டும்.

கல்முனை பிரதேச செயலகத்தைப் பொறுத்தவரை இது இடம்பெறாதிருப்பதை மாகாணக் காணி ஆணையாளர் உற்றுநோக்கியிருக்கிறார்.

கல்முனை கலாசாரப் பேரவைக்கு 2011 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஒரு காணித்துண்டு வழங்கப்பட்டது. இதற்கு வருடா வருடம் கல்முனைப் பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்படும் தொகையை குத்தகைப் பணமாகச் செலுத்தவேண்டும். இப்பணத்தை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகம் காலம் பிந்தாது மாகாண காணி அலுவலகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். இச்செயற்பாடு நிதி அறவீட்டில் சரியாக இடம்பெற்றுள்ளது. ஆனால், அந்த நிதி மாகாண காணித் திணைக்களத்திடம் ஒப்படைக்கும் விடயத்தில் சரியாக இடம்பெறவில்லை. இது ஒரு பெரிய தொகை 409,575 ரூபாவாகும். இதனை கடந்த ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்பு சீர் செய்யுமாறு மாகாணக் காணி ஆணையாளரிடமிருந்து கடிதம் மூலம் பிரதேச செயலாளருக்கு தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

அக்கடிதத்தின் பிரதி எனக்கும் கிடைக்கப் பெற்றிருந்தது. இந்த விடயத்தில் ஒரு துளியேனும் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. மாகாணக் காணி ஆணையாளர் இதனை கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார்.

இது ஒருபுறமிருக்க, கல்முனை பிரதேச செயலாளர் அரச காணியை உடைமையாக்கியவர்களிடமிருந்து வருடா வருடம் குத்தகைப் பணத்தை அறவிட்டிருக்க வேண்டும். அதற்காக எவ்வளவு தொகையென அவர் குறிப்பிட வேண்டும். கல்முனை பிரதேச செயலகம் அண்மைக்காலம் தொட்டு இதனைச் சரியாகச் செய்யவில்லை. இக்காலப்பகுதி பிரதேச செயலாளர் லியாகத் அலியின் காலமாகும்.

இவை தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், அபிவிருத்திக் குழுத் தலைவர், மத்திய அரசின் காணி ஆணையாளர் நாயகம் ஆகியோர் இச்செயற்பாட்டைத் துரிதப்படுத்துமாறு இப்போதைய பிரதேச செயலாளர் அன்சாருக்கு பல கடிதங்கள் எழுதியும் அவை ஓரங்கட்டப்பட்டுள்ளன. பொதுவாக இவ்விடயம் ஒரு நகைப்புக்கிடமாக உள்ளது. இந்த உயரதிகாரிகள் இதுபற்றிக் கவனிக்க வேண்டும். அத்தோடு, தவறிழைத்த அதிகாரிகளுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்''- என்றார்.

# மட்டக்களப்பை ஊழலற்ற சிறந்த மாவட்டமாக மாற்றியமைப்பேன்

## கந்தசாமி பிரபு எம்.பி.



(வெல்லாவெளி செய்தியாளர்)

''மட்டக்களப்பு மாவட்டத்தை ஊழலற்ற, சிறந்ததொரு மாவட்டமாக மாற்றியமைப்பேன்'' என மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடியில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார அலுவலகத்தை அண்மையில் (25) திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் வெளிநாட்டு, வெளிவிவகார பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, வேட்பாளர்களான மகேஸ்வரன் ஜனகோபன், துவேனிகா ருக்மாங்கதன், ஊர்மக்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

''எமது தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக சமூக அக்கறை கொண்ட, ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லாத, சிறந்த தலைமைத்துவம் கொண்டவர்களைத்தான் நாங்கள் களமிறக்கியுள்ளோம். ஆனால், எதிர்க்கட்சியில் வேட்பாளராகக் களமிறக்கியுள்ளவர்களையும் ஏனைய கட்சியில் வேட்பாளராக களமிறக்கியுள்ளவர்களையும் அலசிப்பார்த்தால் கடந்த காலத்தில் ஊழல் செய்தவர்களையும் பல குற்றச்சாட்டுகள் உள்ளவர்களையும் சமூக சிந்தனையற்ற, தலைமைத்துவ பண்பற்றவர்களையும் வேட்பாளராக களமிறக்கியுள்ளார்கள்.

இவர்களை வாக்களித்து பிரதேச சபைக்கு அனுப்பினால் மக்களுக்கு என்ன இலாபம் கிடைக்கும்? தமிழ் மக்களாகிய நீங்கள் சமூக சிந்தனையற்ற, தலைமைத்துவ பண்பில்லாதவர்களை வாக்களித்து அனுப்பினால் மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு கிறவலைத் தூவி றோட்டுப்போட்டு பொக்கட்டில் பணத்தை வீட்டுக்கு கொண்டு செல்வார்கள். இவ்வாறானவர்களுக்கு வாக்களித்து அனுப்பினால் மக்களின் வரிப்பணம் இல்லாமற்போகும்.

நகைச்சுவை நடிகர் வடிவேல், "கிணற்றை காணவில்லை" எனத் தேடும்போது எருவில் மக்கள் குளத்துக்குள் விளையாட்டு மைதானத்தை இப்பவும் தேடுகின்றார்கள்; தேடிக்கொண்டிருக்கின்றார்கள்.

மைதானத்தையும் பணத்தையும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதை மண்முனை தென் எருவில் பற்று மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். ஆகவே, இப்பிரதேச மக்கள், மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். நிச்சயமாக மாவட்டத்திலுள்ள அனைத்து சபைகளையும் தேசிய மக்கள் சக்தியே கைப்பற்றும். தேசிய மக்கள் சக்தியோடு மட்டக்களப்பு மக்கள் இணைந்து திசைகாட்டிக்கு வாக்களியுங்கள். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து சபைகளையும் எங்கள் கட்சியினர் கைப்பற்றி மாவட்டத்தை சிறந்ததொரு, ஊழலற்ற மாவட்டமாக நாங்கள் உருவாக்குவோம்'' - எனத் தெரிவித்தார்.

# தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் தொடர்பான தெளிவூட்டல்



(கல்குடா செய்தியாளர்)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தல் சட்டம் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வானது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் பிரதம உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை (26) இடம் பெற்றது.

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டம் தொடர்பான விதிமுறைகள் தொடர்பான விளக்கங்கள் இதன் போது வழங்கப்பட்டன.

தேர்தல் இடம்பெற்று 21 நாட்களில் தேர்தல் செலவினம் தொடர்பான அறிக்கையை தேர்தல்கள் திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் இதன்போது வேட்பாளர்களின் ஐய வினாக்களுக்கான தெளிவூட்டல்கள் பிரதம உதவி தெரிவத்தாட்சி அலுவலரினால் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் ஏ.தாஹீர் மற்றும் மாவட்டத் தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் பிரிவின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# தேசிய மக்கள் சக்தியின் மோசடி அரசியல் மக்களுக்குப் புரிந்துவிட்டது; இரவில் விழுந்த அதே குழியில் மக்கள் பகலில் விழத் தயாராக இல்லை!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(ஹனபி எம் தாஸீம்)

''ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மோசடி மூலம் வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தி, இப்போது மோசடி மூலம் தேர்தல்களை வெல்ல முயற்சிக்கிறது, ஆனால், மக்கள் இப்போது மோசடி அரசியலைப் புரிந்துகொண்டதால், இந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது இரவில் விழுந்த அதே குழியில் மக்கள் பகலில் விழத் தயாராக இல்லை'' - என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பியகம மாகொல சனாரா மண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பியகம தேர்தல் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

இன்று நாட்டில் ஒரு கொலைகார அரசியல் கலாசாரம் பரவியுள்ளது. இந்தச் சூழ்நிலையில், தற்போதைய தேசிய மக்கள் படைகள் அரசாங்கம் நாட்டுக்குத் தேவையான தேசிய பாதுகாப்பை வழங்கத் தவறிவிட்டது.

நாட்டில் கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடக்கின்றன. இதன் விளைவாக, மக்கள் இப்போது பயத்திலும் சந்தேகத்திலும் வாழவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்வதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கத்திடம் இப்படியா தேசிய பாதுகாப்பை உறுதிசெய்கிறது என்று நாங்கள் கேட்கிறோம்.

அரசாங்கத்தால் வழங்க முடியாத தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை மக்களுக்கு வழங்க ஐக்கிய மக்கள் சக்தி முன்வந்துள்ளது. நாட்டின் பொதுமக்களின் சார்பாக அந்தச் சவாலை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம். இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியால் நிர்வகிக்கப்படும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக இந்தத் திட்டத்தை நாங்கள் செயற்படுத்துகிறோம். அந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார வரம்புகளில் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் காவல்துறையினருடன் இணைந்து, சிவில் பாதுகாப்புக் குழுக்களையும் சமூகப் பாதுகாப்புக் குழுக்களையும் நிறுவி, அவர்கள் மூலம் இந்த நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்.





அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதாக வாக்குறுதியளித்து இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், இப்போது பொருட்களின் விலைகள் உயர்ந்துவிட்டன. அரிசி, சர்க்கரை, மா மற்றும் பால் பவுடர் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. எனக்கு ஒரு தேங்காய் கிடைக்கவில்லை. இலங்கையில் உப்பு கூட உற்பத்தி செய்யப்படுவதில்லை. இந்த அரசாங்கத்தின் குறுகிய பார்வை கொண்ட கொள்கைகளால், அரசாங்கத்தால் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் மக்கள் கடுமையான மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களால் வாழ்க்கைச் சுமையைத் தாங்க முடியாது. அதன்படி, மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் பதில் என்ன? நாங்கள் அதற்காகக் காத்திருக்கிறோம்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்குப் பிறகு, இப்போது கிராமத் தேர்தல்களை நடத்துவதற்கான நேரம் இது. அந்த இரண்டு தேர்தல்களிலும், மக்களிடம் பொய் சொல்லி தேசிய மக்கள் சக்தி நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியது. அவர்கள் பாராளுமன்றத்தில் 2/3 அதிகாரத்தையும் பெற்றனர். இப்போது அவர்கள் கிராமத்தில் அதிகாரத்தையும் கோருகிறார்கள். ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின்போது அவர்கள் மக்களுக்கு பல பொய்யான வாக்குறுதிகளை அளித்தனர். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல், இந்த கிராமத் தேர்தலிலும் மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை அளித்து அதிகாரத்தைத் தேடி வருகிறார்கள். ஆனால், அவர்களின் பொய்யான வாக்குறுதிகளின் அரசியலை இப்போது மக்கள் புரிந்துகொண்டுள்ளனர். எனவே, மக்கள் அன்று இரவு விழுந்த அதே குழியில் பகலிலும் விழத் தயாராக இல்லை - என்றார்.

# ஆனைவிழுந்தான் தொழில்நுட்பக் கல்லூரியை அரசாங்கம் விடுவிக்குமா?

## சிறீதரன் எம்.பி. கேள்வி





''போர்க் காலம், சமாதான காலம் என்ற நிலைமாறுதல்கள் எல்லாவற்றையும் கடந்து, கல்வி, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் தளங்களை சமநிலையில் மேலுயர்த்திய விடுதலைப் புலிகளின் காலத்தில், கிளிநொச்சி மண்ணின் அடையாளங்களுள் ஒன்றாக இருந்த ஆனைவிழுந்தான் தொழில்நுட்பக் கல்லூரியை இராணுவத்திடமிருந்து விடுவித்து, மீள இயக்குவதற்கு இந்த அரசாங்கமாவது நடவடிக்கை எடுக்குமா?'' - என பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து வன்னேரிக்குளம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் வன்னேரிக்குளம் வட்டாரக் கிளைத் தலைவர் தியாகராசா செந்தூரன் தலைமையில் ஆனைவிழுந்தானில் நடைபெற்ற கூட்டத்தில், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் வன்னேரிக்குளம் வட்டார வேட்பாளருமான நாகேந்திரம் செல்வநாயகம், குறித்த வட்டார வேட்பாளரான சிவலிங்கம் பிறின்ஸ் சிந்துஜன், போதகர் சிவலிங்கம் சாம்சன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சுந்தரமூர்த்தி தயாபரன், அக்கராயன் வட்டார வேட்பாளர் தட்சிணாமூர்த்தி முரளி ஆகியோர் உரையாற்றியிருந்ததுடன், பெருந்திரளான மக்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர் மாமனிதர் தராக்கி சிவராமின் 20ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு

(கே .குமணன்)

ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று (28) இடம்பெற்றது.





முல்லைத்தீவு ஊடக அமையத்தின் செயலாளர் டிஷாந்த் தலைமையில் அமையத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு ஊடகவியலாளர் தராகி சிவராமின் திருவுருவப் படத்துக்கு மெழுகுவர்த்தி ஏற்றி, அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து மாமனிதர் சிவராம் தொடர்பான இயக்குநர் சோமீதரனின் 'தராக்கி' ஆவணப்படம் திரையிடப்பட்டதோடு, கலந்துரையாடலும் இடம்பெற்றது.

மாமனிதர் தராக்கி சிவராம் கொலைசெய்யப்பட்டு 20ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவரது கொலைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பதுளை மாவட்டத்தில் 7,12,401 வாக்காளர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

(பசறை நிருபர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக பதுளை மாவட்டத்திலிருந்து 7 இலட்சத்து 12 ஆயிரத்து 401 வாக்காளர்கள் தகுதிபெற்றுள்ளதுடன், இவர்களில் 37ஆயிரத்து 671 வாக்காளர்கள் தபால் மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்றிருந்ததாக பதுளை மாவட்ட தேர்தல் காரியாலயத்தின் உதவித் தேர்தல் ஆணையாளர் கே.காந்தீபன் தெரிவிக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

மாவட்டத்திலுள்ள 276 கிராம அலுவலர் பிரிவுகளில் 576 வாக்குச்சாவடிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்புகள் இடம்பெறவுள்ளன.

வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப் பெட்டிகளை விநியோகிப்பதற்காக பதுளை மத்திய மகா வித்தியாலயத்தில் 27 நிலையங்களும், தர்மதூத கல்லூரியில் 26 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் 18 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 391 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்படும் தேர்தலில் 230 வாக்கெண்ணும் நிலையங்களும் 217 தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முடிவுகளை அறிவித்த பின்னர் வாக்குச்சாவடிகளிலுள்ள வாக்குப் பெட்டிகளைப் பொறுப்பேற்கும் நிலையங்களாக பதுளை மத்திய மகா வித்தியாலயம், பதுளை தர்மதூத கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள நிலையங்கள் செயற்படும் - என்றார்.

# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் 45 மாணவர்கள் பல்கலைக்குத் தெரிவு



இம்முறை வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலிருந்து 45க்கும் அதிகமான மாணவர்கள் இலங்கையிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் பதில் அதிபர் மதனி தில்லைச்செல்வன் தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் வலயத்தில் அதிக மாணவர்களைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பும் பாடசாலையாக நமது பாடசாலை காணப்படுகிறது.

அந்தவகையில் இம்முறை வெளியாகிய பெறுபேறுகளின் அடிப்படையில் வணிகம் மற்றும் கலைப் பிரிவுகளில் இரண்டு மாணவர்கள் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளதுடன், 45க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார்கள்.

இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address :- The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209



# இந்திய - பாக். உறவில் விரிசல்: அதிகரிக்கும் போர் பதற்றம்

## விரைந்து தீர்வு காணுமாறு அமெரிக்கா வலியுறுத்து

பஹல்காம் தீவிரவாத தாக்குதலையடுத்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், உரிய தீர்வு காண வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த 22ஆம் திகதி சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து தீவிரவாதத்துக்குப் புகலிடமளிக்கும் பாகிஸ்தானை வழிக்குக் கொண்டுவர, சிந்து நதிநீர்ப் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்துவது உள்ளிட்ட 5 முக்கிய முடிவுகளை இந்திய அரசு எடுத்தது. இதற்கு பதில் நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் அரசும் மேற்கொண்டது. இந்தியாவுடன் வர்த்தக ரீதியான உறவைப் பாகிஸ்தான் முறித்துக் கொண்டுள்ளது.

அதேநேரத்தில் இரு நாடுகளைச் சேர்ந்த அரசியல் கட்சிப் பிரமுகர்கள், ஆட்சியாளர்கள் தங்களது கருத்தைத் தெரிவித்து வருகின்றனர். இந்தியா மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்துவோமென பாகிஸ்தான் அமைச்சர் ஹனிப் அப்பாஸி வெளிப்படையாக மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்களின் விசா காலாவதியான காரணத்தால் அவர்கள் எல்லோரும் இந்தியாவை விட்டு வெளியேறி வருகின்றனர். பாகிஸ்தானிலுள்ள இந்தியர்களும் நாடு திரும்புகின்றனர். மறுபக்கம் ஜம்மு-காஷ்மீர் எல்லையில் அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது பாகிஸ்தான் இராணுவம். இந்நிலையில், அமெரிக்கா இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ளது.

“இரு நாடுகளுக்குமிடையிலான சூழலை அமெரிக்கா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டு அரசுடன் நாங்கள் தொடர்பில் இருக்கிறோம். இந்தியா - பாகிஸ்தான் இடையே உரிய தீர்வு காண அமெரிக்கா ஊக்குவிக்கிறது. அதேநேரத்தில் பஹல்காமில் நடந்த தீவிரவாத தாக்குதலை அமெரிக்கா வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த விடயத்தில் நாங்கள் இந்தியாவின் பக்கம் நிற்கிறோம்” - என அமெரிக்க அரசு துறையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வோன்ஸ் ஆகியோரும் பஹல்காம் தாக்குதலைக் கண்டித்திருந்தனர். மேலும், இந்தியாவுக்குத் தங்களது ஆதரவை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தீவிரவாதத்தை அழிக்க இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா எந்த வகையிலும் தடையாக இருக்காதென வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். ஏனெனில், அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியாக இந்தியா உள்ளமை முக்கிய காரணமெனத் தகவல்.

காஷ்மீர்ப் பகுதியை இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டு தரப்புகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன. இதில் ஆக்கிரமிப்பு காஷ்மீர்ப் பகுதி பாகிஸ்தான் வசமுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. பஹல்காம் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் அவர்களது கற்பனைக்கும் எட்டாத வகையில் தண்டிக்கப்படுவார்களென பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

“எல்லை தாண்டிய தீவிரவாதம் குறித்த குற்றச்சாட்டை இந்தியா நீண்டகாலமாக கொண்டுள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் தரப்பில் இந்தப் பிரச்சினை சார்ந்து பல்வேறு காலகட்டங்களில் பேசியதுண்டு. அதை வைத்து பார்க்கும்போது அமெரிக்கா இதில் அமைதி காக்குமென நம்புகிறேன்” - என அமெரிக்காவுக்கான முன்னாள் பாகிஸ்தான் தூதர் ஹுசைன் ஹக்கானி தெரிவித்துள்ளார்.

### மோடி - ராஜ்நாத் சிங் சந்திப்பு

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று (28) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

முன்னதாக, பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் பற்றி பாதுகாப்புப் படைகளின் தலைவர் அணில் சவுகான் ராஜ்நாத் சிங்கிடம் நேற்றுமுன்தினம் விளக்கியிருந்தார். இந்நிலையில், தற்போது பிரதமருடனான இச்சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

### நடந்தது என்ன?

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமிலிருந்து 5 கி.மீ. தள்ளியிருக்கும் பைசரன் புல்வெளியில் பயங்கரவாதிகள் கடந்த 22ஆம் திகதி நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இதில் பெரும்பாலானவர்கள் சுற்றுலாப் பயணிகள். கடந்த 2019ஆம் ஆண்டு புல்வாமாவில் இராணுவ வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 40 வீரர்கள் கொல்லப்பட்டதற்குப் பின்பு நடந்தப்பட்ட மிகக் கொடூரமான தாக்குதலாக இது பார்க்கப்படுகிறது.

‘எல்லை தாண்டிய பயங்கரவாதத்தின் தொடர்புகள்’ - இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து சம்பவ இடத்தில் முகாமிட்டு தேசிய புலனாய்வு முகமை தாக்குதல் குறித்த ஆதாரங்களைத் தேடி வருகின்றனர். கூடுதலாக இந்திய இராணுவம் எச்சரிக்கப்பட்டு, பயங்கரவாதிகளை அழிக்கும் வகையில் பல்வேறு இடங்களில் தேடுதல் வேட்டைகள் நடத்தி வருகின்றனர்.

இத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து, 23ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சுக்கான குழு (சிசிஎஸ்) தாக்குதல் தொடர்பான நடவடிக்கை எடுக்க அதன் கூட்டத்தைக் கூட்டியது. சிசிஎஸ் அளித்த விளக்கத்தில், இந்தத் தாக்குதலில் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தின் தொடர்புகள் இருப்பது தெரியவந்துள்ளது.

யூனியன் பிரதேசத்தில் வெற்றிகரமாக தேர்தல் நடத்தப்பட்டு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு நோக்கிய ஜம்மு-காஷ்மீரின் நிலையான நடைமுறைக்கு எதிராக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதென்று தெரிவித்திருந்தது. அந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து இஸ்லாமாபாத்திலுள்ள இந்தியத் தூதரகத்தில் தரை, கடல் மற்றும் வான் படைகளின் ஆலோசகர்களை திரும்பப் பெற்றுள்ளது.

### பாகிஸ்தானின் 16 யூடியூப் செனல்கள் முடக்கம்

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தானின் 16 யூடியூப் செனல்களை முடக்கம் செய்து மத்திய உள்துறை அமைச்சு அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

### வான்வெளியைப் பயன்படுத்தத் தடை விதித்த பாகிஸ்தான்

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியா எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிர்வினையாற்றுவதாகக் கருதி தங்களது வான்வெளியை இந்திய விமானங்கள் பயன்படுத்தத் தடை விதித்த பாகிஸ்தான் கோடிக்கணக்கில் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளது. இந்திய விமானத் துறைக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆனால், தனது வான்வெளியைக் கடக்கும் விமானங்கள் மூலம் ஒரு நாளைக்கு பல இலட்சம் வருமானம் ஈட்டி வந்த பாகிஸ்தான் இதுவரை பல கோடி இழப்பைச் சந்தித்துள்ளது.

வெளிநாடுகளின் விமானங்கள் வந்தாலும், இந்தியாவிலிருந்து செல்லும் விமானங்கள்தான் பாகிஸ்தானை அதிகம் கடந்துசெல்லும் என்பதால், மிகப்பெரிய இழப்பாக இது இருக்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

வெறுமனே வான்வெளியைப் பயன்படுத்துவது மட்டுமல்ல, பாகிஸ்தான் விமான நிலையத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களைக் கூட்டினால் நாளொன்றுக்கு பாகிஸ்தான் சந்திக்கும் இழப்பு கிட்டத்தட்ட 3 இலட்சம் டொலர்கள் என்கிறது தரவு.



## பத்ம பூஷன் விருது

நடிகர் அஜித் குமாருக்கு ‘பத்ம பூஷன்’ விருது வழங்கி இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கௌரவித்தபோது....



# ஈரான் துறைமுக வெடி விபத்து: 40 பேர் பலி; 1,200 பேர் காயம்

ஈரானிலுள்ள ஷாஹித் ராஜாயி துறைமுகத்தில் சனிக்கிழமை (26) ஏற்பட்ட வெடி விபத்தில் 40இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 1,200இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

ஈரானின் ஹார்மோஸ்கான் மாகாணம், பந்தர் அப்பாஸ் நகருக்கு அருகேயுள்ள ஷாஹித் ராஜாயி துறைமுகத்திலுள்ள சினா கென்டெய்னர் யார்டில் சனிக்கிழமை (26) பயங்கர வெடி விபத்து ஏற்பட்டு தீப்பிடித்து எரிந்தது. இதனால் அப்பகுதி புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

தலைநகர் தெஹ்ரானிலிருந்து சுமார் 1,000 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்தத் துறைமுகத்தில் வெடி விபத்து ஏற்பட்டதும் வான்வழியாக ஹெலிகொப்டர் மூலம் தீயை அணைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஹார்முஸ் நீரிணை அருகே இந்த விபத்து ஏற்பட்டது. உலகளவிலான எண்ணெய் விநியோகப் பணியில் இந்தப் பகுதி முக்கியமானதாகவுள்ளது. இந்த விபத்து குறித்து உரிய விசாரணை மேற்கொள்ள



ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுகுறித்து தகவலறிந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்று தீயை அணைக்கும் பணியிலும் மீட்புப் பணியிலும் ஈடுபட்டனர். இந்த விபத்தில் கென்டெய்னர்கள் பல வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விபத்தில் இதுவரை 40இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில் 1,200இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில்,பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.



கடந்த 2020ஆம் ஆண்டு மே மாதம் இதே துறைமுகத்தில் மிகப்பெரிய சைபர் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதனால் அங்கிருந்த கணினிகள் செயலிழந்து, பல நாட்களுக்குப் போக்குவரத்துக் குளறுபடி ஏற்பட்டது.

புதிய அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஈரான் அதிகாரிகளிடையே ஓமனில் 3ஆம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் நிலையில், இந்த வெடி விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாப்பரசர் பிரான்சிஸின் கல்லறையை பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி




ரோம் புனித மேரி பசிலிக்கா பேராலயத்திலுள்ள மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் கல்லறையைப் பார்வையிட பொதுமக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், புனித மேரி பசிலிக்கா பேராலயம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது.

கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த 21ஆம் திகதி உடல்நலக் குறைவால் காலமானார். அவரது திருவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்குப் பின் சனிக்கிழமை (26) நல்லடக்கம் செய்யப்பட்டது.

பாப்பரசர் பிரான்சிஸின் விருப்பத்தின்பேரில் அவரது உடல் ரோமிலுள்ள புனித மேரி மேஜர் பசிலிக்கா பேராலயத்தில் எளிய கல்லறையொன்றில் அடக்கம் செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து 9 நாட்கள் வத்திக்கானில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்நிலையில் 2ஆவது நாளான நேற்றுமுன்தினம் (27) பாப்பரசரின் கல்லறையைப் பார்வையிட பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர். அதன்படி ரோம் மட்டுமன்றி இத்தாலி முழுவதிலுலிருந்து ஏராளமானோர் பாப்பரசரின் கல்லறையைப் பார்வையிட்டு வருகிறார்கள்.

குறிப்பாக, அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்த முடியாத பலரும், கல்லறையைப் பார்வையிடச் சென்று வருகின்றனர். இதைப்போல வெளிநாடுகளிலிருந்து சென்று வத்திக்கானில் தங்கியிருக்கும் பலரும் பாப்பரசர் கல்லறையில் தங்கள் இறுதி மரியாதையை செலுத்தி வருகின்றனர். ரோஜா பூக்களை கல்லறையில் வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இதனால் புனித மேரி பசிலிக்கா பேராலயம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. பலரும் கண்ணீருடன் பாப்பரசரின் நினைவுகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் யோசனை முன்வைப்பதாகக் கூறியது வேடிக்கையானது

## ஜீவன் தொண்டமான் எம்.பி. தெரிவிப்பு

(பொகவந்தலாவ நிருபர்)

''மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் 1,700 ரூபா பெற்றுத் தருவதாகக் கூறிய அரசாங்கம் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் யோசனையொன்றை முன்வைப்பதென்பது வேடிக்கையாக உள்ளது''- என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் எபோட்ஸ்லி தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் (27) முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் கருத்துரைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

''எம்மைப் பொறுத்தமட்டில் மக்கள் மத்தியில் சென்று கசப்பான உண்ணையைக் கூறுகிறோம். ஆனால், மக்கள் எமக்கு வாக்களிக்க மறுக்கிறார்கள். சிலர் இனிப்பான பொய்களைக் கூறுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு வாக்களிக்கிறீர்கள். சிலர் இரண்டாயிரம் வீடுகளைத் தருவதாக ஏலம் விட்டார்கள். வீடு என்பது எமக்கு முக்கியமல்ல. அதனை நான் கூறியதால் என்ன விமர்சனம் செய்தார்கள்.

வீடமைப்புத் திட்டம் என்பது அனைவருக்கும் கிடைக்காது. எமக்கு காணியே அவசியமானது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருந்த காலப்பகுதியில் காணி ஒதுக்கீட்டுக்காக 4,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்தோம். இம்முறை உள்ள வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கான ஒதுக்கீடு காணாமல்



செய்யப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து ஜனாதிபதிகளும் வீடமைப்பு மற்றும் சம்பளம் தொடர்பாகப் பேசினால் மலையக மக்கள் வாக்களிப்பார்கள் என எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் கோட்டாபய ராஜபக்ஷ ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்குவதாகக் கூறினார். மறுபுறம் சஜித் பிரேமதாச 1,500ரூபா வழங்குவதாகக் கூறுகிறார். நமக்கிருக்கும் பிரச்சினை அதுவல்ல. நம்மைப் பொறுத்தவரையில் தீர்வு தான் முக்கியமே தவிர சலுகைகள் அல்ல.

இந்த அரசாங்கம் தமிழில் தனிவீட்டுத்திட்டம் கொண்டுவருவதாகவும் சிங்கள மொழியில் மாடிவீட்டுத்திட்டம் கொண்டுவருவதாகவும் கூறுகிறது. இதில் எது உண்மையென்று தெரியவில்லை. இதற்கு முன்னர் மலையகத்தில் உள்ள அமைச்சர்கள் ஆளுமையோடு செயற்பட்டார்கள். இந்த அரசாங்கத்தில் மலையகம் ஆளுமையை இழந்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக முகங்கொடுக்கப்போவது யார்? யாரும் இல்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மகா நடிகர்கள் உள்ளார்கள். ஆசை வார்த்தைகளைப் பேசி வாக்குகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மக்களை ஏமாற்றும் கூட்டம்தான் இந்த அரசாங்கம். எமது சமூகத்திலுள்ள வைத்தியர்கள், சட்டத்தரணிகள் போன்றோரை தோழருக்குத் தெரியவில்லை.

நாம் வறுமையை மாத்திரம் பார்க்கின்றோமே தவிர, பெருமையைப் பார்ப்பதில்லை. எமது வரலாறு ஒட்டுமொத்தமாக மறைக்கப்பட்டுள்ளது. நாம் இந்தியப் பிரஜைகள் அல்லர். நமக்கென ஓர் அடையாளம் உள்ளது. மலையகத்தில் 66 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்ட போதிலும் தீர்வு வரவில்லை''- எனக் குறிப்பிட்டார்.

# லிந்துலை – டயகம வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி கடும் மழைக்கு மத்தியில் மக்கள் ஆர்ப்பாட்டம்




(பொகவந்தலாவ நிருபர்)

லிந்துலை முதல் டயகம வரையிலான பிரதான வீதி பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகிறது. இருப்பினும், டயகம நகர பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையூடாக பாதை அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அப்பணி இடைநிறுத்தப்பட்ட நிலையில், பிரதேச மக்கள் கடும் மழையிலும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பி தங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் டயகம பிரதான நகரத்தில் இரண்டு மணிநேரம் இடம்பெற்றது.

புனரமைப்பு செய்யப்பட்ட வீதி போக்குவரத்துக்கேற்றதாக இல்லாத நிலையில், காணப்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் குறிப்பிட்டனர்.

# கந்தேகெதர வீதியோரத்தில் நபரொருவர் சடலமாக மீட்பு

## விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார்

(ராமு தனராஜா)



பதுளை, அலுகொல்ல- கந்தேகெதர வீதியில் நேற்று (28) காலை பாடசாலை அதிபரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கந்தேகெதர பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் ஹாலி -எல பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரென அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் சரண்யா தமிழ் வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவின் அதிபராகக் கடமையாற்றி வருபவரெனத் தெரியவருகிறது.

கந்தேகெதரவிலிருந்து பதுளைக்குச் சென்றுகொண்டிருந்த தனியார் பயணிகள் பஸ், தியனவல பகுதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளுடன் வீதி யோரத்தில் ஒருவர் வீழ்ந்து கிடப்பதை பஸ் ஓட்டுனர் அவதானித்ததாகவும் குறித்த நபரை மீட்டு உடனடியாக கந்தேகெதர வைத்தியசாலைக்கு கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


வைத்தியசாலையில் வைத்தியர் பரிசோதனை மேற்கொண்டபோது குறித்த நபர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்தார்.

உயிரிழந்தமைக்கான காரணம் விபத்தாக இருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுள்ளதாக கந்தேகெதர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கீத் ரத்நாயக்க தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் சிறுமியொருவர் காயம்



(ராமு தனராஜா)

சீரற்ற காலநிலையால் நேற்று முன்தினம் (27) பெய்த கடும் மழையின் காரணமாக ஹாலி-எல பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்த விழுந்ததில் 9 வயதுச் சிறுமியொருவர் காயமடைந்து பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹாலி - எல பொலிஸார் தெரிவித்தனர்.

ரொசட் தோட்டம், கிரவனாகொட, உடுவர, ஹாலி- எல பகுதியில் உள்ள வீடொன்றில் மீதே இவ்வாறு மண்மேடு சரிந்து விழுந்ததில் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காயமடைந்த 9 வயதுச் சிறுமி பதுளை வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக ஹாலி - எல பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஆங்காங்கே சிறு சிறு மண்சரிவுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களெல்லாம் வீட்டுக்குப் புள்ளடியிட்டு

# தமிழரசுக் கட்சியின் பக்கம் என்ற வலுவான செய்தியை ஆட்சியாளர்களுக்கு சொல்லவேண்டும்

## ரவிகரன் எம்.பி.தெரிவிப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

''எதிர்வரும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் ஒருமித்து வீட்டுச்சின்னத்துக்கு புள்ளடியிடுவதன் மூலம் தமிழர்கள் எல்லாம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பக்கம் என்ற வலுவான செய்தியை ஆட்சியாளர்களுக்கு உரத்துக் கூறவேண்டும்''- – என வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று உள்ளூர் அதிகாரசபைக்குட்பட்ட குமுலமுனை வட்டாரத்தில் நேற்று முன்தினம் (27) இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''எமது தமிழ் கிராமங்கள் பெரும்பான்மையின ஆட்சியாளர்களோடு இல்லை, தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியான தமிழரசுக் கட்சியுடன் தான் தொடர்ந்தும் இருக்கின்றன என்பதை தமிழ் மக்கள் உரத்த குரலில் இந்த ஆட்சியாளர்களுக்குக் கூறுகின்ற தேர்தலாக இம்முறை உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் அமைகின்றது. அந்தவகையில், வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பரப்பிலுள்ள எமது கிராமங்கள் அனைத்தும் தமிழரசுக்கு அமோகமாக வாக்குச் செலுத்தவேண்டும்.

குறிப்பாக, இந்தப் பகுதியில் அமைந்துள்ள எமது பூர்வீக வழிபாட்டிடமான குருந்தூர்மலைக்காகவும் அங்கு இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கெதிராகவும் சைவமக்களின் வழிபாட்டு உரிமைக்காகவும் தமிழரசுக் கட்சியினரான நாமே தொடர்ந்து போராடி வருகின்றோம்.

இவ்வாறான ஆக்கிரமிப்புளுக்கெதிராக பெரும்பான்மையினக் கட்சிகளால் எமக்கு ஆதரவாகச் செயற்பட முடியாது. பெரும்பான்மையினக் கட்சிகளுக்கு வாக்குச் செலுத்துவதன்மூலம் எமது பூர்வீக பாரம்பரிய



இடங்கள் அனைத்தும் பறிபோகும் நிலையே ஏற்படும்.

அதேவேளை, எந்தப் பெரும்பான்மை இனத்தவர்களும் தமிழர்களுக்கு வாக்களிப்பதில்லை. ஆனால், தமிழ் மக்களில் சிலர் பெரும்பான்மையினக் கட்சிகளுக்கு வாக்குச்செலுத்துகின்ற கலாசாரம் காணப்படுகின்றது. எமது கட்சிக்குள் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அந்தப் பிரச்சினைகள் சீர்செய்யப்படவேண்டும். நிச்சயமாக எதிர்காலத்தில் அப்பிரச்சினைகள் சீர்செய்யப்படும்.

ஒற்றையாட்சிமுறை இலங்கையில் தமிழர்கள் உரிமைகளுடன் வாழ்வதற்கு ஏற்றதல்ல என்ற அடிப்படையில், சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து தந்தை செல்வாவால் இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. அதன்பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னமே தமிழர்களின் அடையாளம் எனத் தலைவராலும் தமிழ் மக்களிடம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அந்தவகையில், வீடு என்பது தமிழர்களின் அடையாளமாகும். தமிழரசுக் கட்சி தமிழர்களின் கட்சியாகும்.

தற்போது பாராளுமன்றில் அதிக உறுப்பினர்களைக்கொண்ட கட்சிகளின் வரிசையில் மூன்றாவது நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியே காணப்படுகின்றது. தற்போதும் தமிழர்களின் உரிமைகள் தொடர்பில் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களே கரிசனையுடன் பேசுகின்றனர்.

குறிப்பாக, தமிழர்களது அரசியல் தீர்வு, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுவிப்பு, நில ஆக்கிரமிப்பு விவகாரங்கள் எனத் தமிழர்களின் பிரச்சினைகள், உரிமைகள் தொடர்பாக எமது தமிழரசுக் கட்சியே அதிக கரிசனையோடு செயற்படுகின்றது.

ஆகவே, இந்த உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு அமோகமாக வாக்களித்து தமிழ் மக்கள் எப்போதும் தமிழரசுடனேயே இருப்பார்கள் என்ற வலுவான செய்தியை ஆட்சியாளர்களுக்குச் சொல்லவேண்டும்'' - என்றார்.

# பதில் பொலிஸ் மா அதிபர் வவுனியாவுக்கு விஜயம்



(வவுனியா நிருபர்)

வவுனியா பொலிஸ் தலைமையக வளாகத்தில் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலகம் மற்றும் கேட்போர் கூடம் உட்பட பொலிஸாருக்கான சுற்றுலா விடுதி என்பனவும் நேற்று பதில் பொலிஸ் மா அதிபரால் திறந்துவைக்கப்பட்டன.

இதன்போது வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபருடன் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது போதைப்பொருள் தடுப்பு தொடர்பிலும் பதில் பொலிஸ் மா அதிபர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

# இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தின் 23ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவு விழா

(பு.கஜிந்தன்)





இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தின் 23ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் (27) நடைபெற்றன.

இந்நிகழ்வானது நிலையக்கொடி ஏற்றிவைக்கப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள், ஆங்கில விசேட வகுப்புகளில் விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கான வெற்றிக்கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கல், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், துடுப்பாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக் கேடயம் வழங்கல், சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கான கேடயம் வழங்கல், நூலக அலுவலர்கள் கௌரவிப்பு போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.

ம.கஜந்தரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சஞ்சீவனும் கௌரவ விருந்தினர்களாக பாஸ்கரன் தம்பதியினர், செல்வராணி வேலாயுதம்பிள்ளை ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன், ஆசிரியர்கள், கல்விமான்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழரசுக் கட்சியின் பிரதேச சபைக்கான பிரசாரக் கூட்டம் வவுனியா வடக்கில்



(வவுனியா நிருபர்)



இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் (27) புளியங்குளத்தில் இடம்பெற்றிருந்தது.

தமிழரசுக் கட்சியின் வவுனியா வடக்கு வேட்பாளர் த.தனுசன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான சுமந்திரன் மற்றும் தமிழரசுக் கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச சபையின் வேட்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இலங்கை – இந்தியா – தென்னாபிரிக்கா பங்கேற்கும் முத்தரப்பு மகளிர் ஒருநாள் தொடர்

## முதல் ஆட்டத்தில் இந்தியாவிடம் படுதோல்வியடைந்த இலங்கை






(அகீல் சிஹாப்)

இலங்கையில் நடைபெற்றுவரும் முத்தரப்பு மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டத்தில் இலங்கை மகளிர் அணி இந்தியாவிடம் படுதோல்வியடைந்தது.

இலங்கை, இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் மோதும் மகளிர் முத்தரப்பு ஒருநாள் சர்வதேச தொடர் நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமாகிறது.

முதல் போட்டியில் இலங்கை மற்றும் இந்தியா அணிகள் மோதின. இப்போட்டி மழை காரணமாக 39 ஓவர்கள்கொண்ட போட்டியாக மாற்றியமைக்கப்பட்டது. முதலில் துடுப்பாடிய இலங்கை அணி, 38.1 ஓவரில் 147 ஓட்டங்களுக்குச் சுருண்டுபோனது. ஹசினி பெரேரா 30 (46) ஓட்டங்களும், கவிஷா தில்ஹாரி 25 (26) ஓட்டங்களும் அதிகபட்சமாக எடுத்தனர்.

பின்னர் ஆடிய இந்திய அணியில் ஸ்மிரிதி மந்தனா 43 (46) ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க, பிரதிகா ராவல் மற்றும் ஹர்லீன் தியோல் கூட்டணி பொறுப்பாக ஆடியது. பிரதிகா ராவல் 50 (62) ஓட்டங்களும், ஹர்லீன் தியோல் 48 (71) ஓட்டங்களும் பெற இந்திய அணி 29.4 ஓவரில் 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் தொடரின் 2ஆவது ஆட்டத்தில் இந்திய – தென்னாபிரிக்க மகளிர் அணிகள் மோதுகின்றன. இலங்கை தங்களது 2ஆவது ஆட்டத்தில் வெள்ளிக்கிழமை தென்னாபிரிக்காவை எதிர்கொள்கிறது.



# பிரீமியர் லீக் சம்பியன் பட்டம் வென்ற லிவர்பூல்

## அதிக கோல்கள் அடித்து முஹமட் சலாஹ் சாதனை

(அகீல் சிஹாப்)

பிரீமியர் லீக் உதைபந்து தொடரில் இறுதிப்போட்டியில், லிவர்பூல் அணி 5-1 என்ற கோல் கணக்கில் டோட்டன்ஹாம் அணியை வீழ்த்தி 2019-20ஆம் ஆண்டுக்குப் பிறகு இரண்டாவது தடவையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தியது.

அன்பீல்ட் மைதானத்தில் நடந்த பிரீமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டியில் ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தின் டோட்டன்ஹாம் வீரர் டொமினிக் சோலன்கி கோல் அடித்தார். அதன் பின்னர் லிவர்பூல் அணி கோல்மழை பொழியத் தொடங்கியது.

லூயிஸ் டயஸ் 16ஆவது நிமிடத்திலும் அலெக்சிஸ் மேக் அலிஸ்டர் 24ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். இரண்டாம் பாதியில் ஜாம்பவான் வீரர் முஹமட் சலாஹ் கோல் அடிக்க (63ஆவது நிமிடம்), 69ஆவது நிமிடத்தில் எதிரணி வீரர் டெஸ்டினி உடோகி மூலம் லிவர்பூல் அணிக்கு 5ஆவது கோல் கிடைத்தது. இதன்மூலம் லிவர்பூல் 5-1 என்ற கோல் கணக்கில் டோட்டன்ஹாம் அணியை வீழ்த்தி வெற்றிவாகை சூடியது.

பிரீமியர் லீக் தொடரில் அதிக கோல்கள் அடித்த (ஆங்கிலேயர் அல்லாத) சேர்ஜியோவின் (184) சாதனையை முஹமட் சலாஹ் (185) தகர்த்தார்.

அத்துடன், கோல்டன் பூட் போட்டியில் சலாஹ் தனது முன்னிலையைத் தக்க வைத்துக்கொண்டதால் அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்.



# கண்டி வேல்ஸ் அணி சம்பியன்

(ஜே.எம்.ஹாபீஸ்)

கண்டி, கலஹா லக்கி ஸ்டார் விளையாட்டுக் கழகம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை ஒழுங்கு செய்திருந்தது. கலஹா மின்னும் தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வாரம் நடந்த போட்டியில் ரூபவதனன் தலைமையிலான வேல்ஸ் அணி சம்பியனானது.

மேற்படி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் ரவி தலைமையிலான பைட்டர்ஸ் அணியும் ரூபவதனன் தலைமையிலான வேல்ஸ் அணியும் களமிறங்கின. முதலில் துடுப்பெடுத்தாடிய பைட்டர்ஸ் அணியானது நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 57 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வேல்ஸ் அணி 5ஆவது ஓவரில் மூன்று விக்கெட்டுகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்த யுவன் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## PSL - 2025

### இன்றைய போட்டி

போட்டி இல. - 18

முல்தான் VS குவெட்டா

லாஹூர் - இரவு 8.30 மணி

### முடிவு

போட்டி இல. - 17

*குவெட்டா - 178/7 (20)*

*பெஷாவர் - 114/10 (15.2)*

*குவெட்டா 64 ஓட்டங்களினால் வெற்றி*

# எங்களிடம் பணமில்லை; தெற்காசிய விளையாட்டுப் போட்டி உரிமையை நிராகரிப்போம்

## என்கிறார் தேசிய ஒலிம்பிக் பேரவையின் தலைவர்






(அகீல் சிஹாப்)

2026 ஆம் ஆண்டு நடைபெற திட்டமிடப்பட்டுள்ள 15ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியை இலங்கை நடத்தக் கோரினால் அதற்கான செலவினத்தைக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்வது சிரமமான காரியமென இலங்கை தேசிய ஒலிம்பிக் பேரவையின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் தெரிவித் துள்ளார்.

இந்தியா வுக்கும் பாகிஸ் தானுக்கும் இடையி லான தற்போதைய அரசியல் நெருக்கடி காரணமாக 2026ஆம் ஆண்டில் 15ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடைபெறுவது சந்தேகத்தில் உள்ளது. இறுதியாக 2019இல் நேபாளத்தின் காத்மாண்டுவில் போட்டி நடைபெற்றது.

2023ஆம் ஆண்டு பாகிஸ்தானின் லாகூரில் நடைபெறவிருந்த குறித்த விளையாட்டுப் போட்டி நாட்டின் உள்பிரச்சினைகள் காரணமாக பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டன. இப்போது, பிராந்தியத்திலுள்ள ஒலிம்பிக் அதிகாரிகளின் பொதுவான ஒப்பந்தத்தின்படி, பாகிஸ்தான் அரசாங்கமும் பாகிஸ்தான் ஒலிம்பிக் குழுவும் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 2026 ஜனவரி 23 முதல் 31 வரை இந்த நிகழ்வை நடத்த முடிவு செய்துள்ளன. பாகிஸ்தான் இதற்கு முன்பு 1989 மற்றும் 2004ஆம் ஆண்டுகளில் இஸ்லாமாபாத்தில் குறித்த போட்டி நடைபெற்றது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான தற்போதைய நிலைமை தொடர்ந்தால், போட்டியில் இந்தியாவின் பங்கேற்பு சந்தேகத்தில் இருக்கும். இதற்கிடையில், இலங்கை தேசிய ஒலிம்பிக் பேரவையின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் தெரிவிக்கையில், இரு நாடுகளுக்குமிடையே நடந்துவரும் மோதல் ஒரு தீவிரமான பிரச்சினை என்றும், அதனால் தெற்காசிய விளையாட்டுப் போட்டியை 2026 ஜனவரியில் திட்டமிட்டபடி நடத்த முடியாத சூழ்நிலைக்கு வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார்.

2026 தெற்காசிய விளையாட்டுப் போட்டியை நடத்தும் உரிமைகளை ஏற்க இலங்கை தயாராக உள்ளதா என்று கேட்டபோது, போட்டியை நடத்துவதற்கு நிறைய பணம் செலவாகிறது. குறுகிய காலத்தில் அந்தப் பணத்தை ஏற்பாடு செய்வது எங்களுக்குக் கடினம். இலங்கையின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இலங்கை அரசாங்கத்தால் இவ்வளவு பெரிய தொகையை உடனடியாக வாங்க முடியாது. அத்தகைய திட்டம் முன்வைக்கப்பட்டால், நாங்கள் அதை நிராகரிக்க வேண்டியிருக்கும் - எனத் தெரிவித்தார்.

இதேவேளை, 2027 தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் உரிமைகளை இலங்கை பெற்றுள்ளது. இதற்கு முன்பு 1991 மற்றும் 2006இல் இலங்கை தெற்காசிய விளையாட்டுப் போட்டியை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்



★ நடப்பு ஐ.பி.எல். தொடரில் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணியுடனான ஆட்டத்தில் மெதுவாக பந்து வீசியதற்காக லக்னோ அணித் தலைவர் ரிஷப் பண்ட் மீது ரூ.24 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 2ஆவது தடவையாக அவர் மீது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய வீரர்களுக்கு போட்டி கட்டணத்தில் 25 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

★ லக்னோ அணியுடனான போட்டியில் வெற்றிபெற்றதால், ஐ.பி.எல். வரலாற்றில் மும்பை அணி 150ஆவது வெற்றியைப் பதிவு செய்தது. இதன் மூலம் இந்த மைல்கல்லை எட்டிய முதல் அணி என்ற சாதனையை மும்பை படைத்தது. அதிக வெற்றி பட்டியலில் 2ஆவது இடத்தில் சென்னை (140 வெற்றி) உள்ளது.

## IPL - 2025

### இன்றைய போட்டி

போட்டி இல. - 48

டெல்லி VS கொல்கத்தா

டெல்லி - இரவு 7.30 மணி

### முடிவுகள்

போட்டி இல. - 45

*மும்பை - 215/7 (20)*

*லக்னோ - 161/10 (20)*

*மும்பை 54 ஓட்டங்களினால் வெற்றி*

போட்டி இல. - 46

*டெல்லி - 162/8 (20)*

*பெங்களூர் - 165/4 (18.3)*

*பெங்களூர் 6 விக்கெட்களினால் வெற்றி*

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான ஜூனியர் தமிழன் ஏப்ரல் மாத சஞ்சிகைகள்






தற்போது விற்பனையில்...

- ☑ புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
- ☑ வினாத்தாள் I, II வழிகாட்டிகள்
- ☑ தமிழ், கணிதம், சுற்றாடல் பாட செயலட்டைகள் (தவணைகளின் அடிப்படையில்)
- ☑ திறன் அடிப்படையிலான நுண்ணறிவு விளக்கங்கள்
- ☑ தரம் - 5 சுற்றாடல் பாடத்தொகுப்பு - 04, 05
  - இசைக்கருவிகளின் சுற்றாடல்
  - இரு வினாக்களை அடக்கிய ஒரு வினாக்களின் தொகுப்பு
- ☑ நுண்ணறிவுத்தொடர் 2 - கட்புலனறிவு
- ☑ விஞ்ஞான பரிசோதனைகள்
- ☑ சிங்கள, ஆங்கிலப் பாட பயிற்சிகள்

ஒவ்வொரு சஞ்சிகைக்குள்ளும் இணைக்கப்பட்டுள்ள படத்தாள் ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

- ☑ மாணவர்களின் சித்திரங்கள்
- ☑ கதைக்குள் ஒரு கணிதப்புதிர் - 04, குறுக்கெழுத்துப்போட்டி
- ☑ சிறுவர் திருக்குறள் சிறுகதை

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo −07